உ

சிவமயம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

# ஆறுமுக நாவலர்

அவர்கள்

( கூடிய விரிவாக்கப்பட்ட இரண்டாவது பதிப்பு 1998 )



தொந்தி வயிற்றோனே தோய்மைக் கணபதியே
ஐந்து கரமுடைய ஆனை முகத்தோனே
மந்தி வழிவந்த மாந்தர் முதற்குருவே
சிந்தையிற் கொண்டேனே சிரந்தாழ்த்தி விட்டேனே
தந்தையும் தாய் நினைவில் தந்தசிறு நூலிதனை
வந்தென்னை வாழ்த்திடுவாய் குறை நீக்கி வளர்த்திடுவாய்!

ஆக்கியோன்: இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா

சிவமயம்

நல்லை நகர்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

## அவர்கள்

## நாவலர் தோற்றம்:

## 1822 – 1879

" நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்து புராணுகமங்கள் எங்கே பிரசங்க மெங்கே
ஆத்தனறி வெங்கே அறை "

என சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களால் சிறப்பித்து வாழ்த்தப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நல்லூர் கார்காத்த வேளாள மரபுதித்த கந்தப்பிள்ளைக்கும் சிவகாமி அம்மையாருக்கும் 1822-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி பிறந்தார். இறைவனருளால் 57 வருடங்கள் இப்பூவுலகில் நிலைத்து 1879-ம் ஆண்டு கார்த்திகை மக நட்சத்திரத்தில் நற்றெண்டாற்றி சிவபதமெய்தினர்.

வே. கனகரத்தினம் உபாத்தியார் 1882ம் ஆண்டிலேயே
சைவப்பிரகாச அச்சகத்தில் வெளியிட்ட நாவலர் சரித்திரம்
என்ற நூல் பின்வரும் அரிய சுருக்க விபரங்களை தருகின்றது.—
" ஈழமண்டலத்திலே, யாழ்ப்பாணத்திலே.நல்லூரிலே, கார்காத்த
வேளாள வருணத்திலே, பாண்டிமழவர் குடியிலே, ஞான
பிரகாச சுவாமிகள் மரபிலே, தமிழ்நாட்டிலுள்ள சைவசமய
கள் சைவ சமயமே சற்சமயமென்றுணர்ந்து அதன்வழி ஒழு
உய்யும் பொருட்டு, கந்தப்பிள்ளை என்பவருக்கு அவருடை
பத்தினியாராகிய சிவகாமியாருடைய அருமைத் திருவயிற்றிலே
கலியப்தம் 4924க்கும் சாலிவாகன சகாப்தம் 1745க்கும் சமமா
கிய சித்திரபானு ஹூ மார்கழி 5உ புதன்கிழமை இரவு அவிட்ட
நக்ஷத்திரமும், பூர்வபக்கப் பஞ்சமி திதியும் வச்சிரயோகமு

பாலவகரணமுங் கூடிய சுபதினத்திலே, சிங்கலக்கினத்திலே ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தார். ( Dec. 1822 )......"

(பக்கம் 1—2)

அவருடைய சிவதொண்டின் சிறப்பை உடுப்பிட்டி சிவசம்பு புலவர் கூறுவது பின்வருமாறு:

*ஆரூரன் இல்லை புகலியர் கோன் இல்லை அப்பன் இல்லை*
*சீருரு மாணிக்க வாசகன் இல்லை தீசையளந்த*
*பேருரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்கியார்*
*நீருரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு நீர்மையரே.*

மேலும் கனகரத்தின உபாத்தியாயர் தரும் மேலதிக விபரம் பின்வருமாறு இவை நாவலரின் வாழ்வின் முழுவதையும் குறிக்கும்.

"வேதாகமோக்த சைவசித்தாந்தப் பிரவர்த்தகரும், சிவாகம விற்பன்னரும், திருநெறித் தமிழாகிய தேவார திருவாசகங் களின் உண்மைப் பொருளுணர்ந்தவரும், இலக்கண விலக்கியக் கடலை நிலைகண்டுணர்ந்தவரும், சிவனடியாரைச் சிவனென மதிக்கும் மெய்யடியாரும், தமிழ் நாடெங்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்தி மெய்யறிவை ஊட்டிய சைவாசாரியாரும், திருவாண தீக்ஷிதரும், நைட்டிகப்பிரிமசரிய வொழுக்கத்திற் றவறுதவரும், சைவப் பிரசங்கமென்னும் விடா மழையைப் பொழியுந் திரு வாயையுடையவரும், காலந்தோறுஞ் சிவனடியாருக்குத் திரு வமுது கொடுக்குஞ் சைவப்பிரபுவும், பரசமயவிநளை ஒட்டெடுக் கச் செய்த பரமாசாரியரும், சிவஞான நூல்களை ஓதல் ஓதுவித் தல், கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல் என்னும் ஞான யாகஞ் செய்தவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்கள்........."

(பக்கம் 123)

"அன்றிராத்திரி ஐந்து நாழிகை வரையில் அறிவிற் சற்றே னும் பேதமில்லாதவராயிருந்து தேவார முதலிய அருட்பாக் களை ஓதுப்படி கட்டளையிட்டு, அவைகளோதப்படும்போது சிதம் பரம், காசி, மதுரை, திருச்செந்தூர் முதலிய புண்ணிய தலங் களின் விபூதியணிந்து, உருத்திராக்ஷம் பூண்டு, கங்காதீர்த்தம்

உட்கொண்டு, கைகளைச் சிரசின்மேற் குவித்து, உயிர்க்குயிரா
யுள்ள சிவபெருமானுடைய திருவடிகளிலே சிந்தை வைத்து,
தமது ஐம்பத்தாறும் வயசும் 11-ம் மாசமுமாகிய பிரமாதிஷூ
கார்த்திகை மீ 21உ சுக்கிரவாரமும் மகநக்ஷத்திரமும் சப்தமி
திதியும் கூடிய புண்ணிய காலத்திலே இரவு 10 நாழிகையிலே
ஸ்ரீ நடராஜப் பெருமானுடைய குஞ்சிதபாத நிழலையடைந்
தார்.......... ,, (Dec. 1879)

(பக்கம் 120-121 )

இச்சிறு நூலில் மேற்படி நாவலர் பெருமான் சரித்திரத்தையே
அம்சம் அம்சமாக அடியேனது அறிவு வளர்ச்சிக்கும் ஆற்றலுக்
கும் அமைய வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

## நாவலர் குருபரம்பரை

நாவலர் தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிட
மும் பின்னர் மேற்படிப்பை நல்லூர் வித்வான சரவணமுத்துப் புலவரிடமும் கற்றூர்.
மேற்படி சரவணமுத்துப் புலவரின் குருநாதரான தெல்லிப்பழையைப் பிறப்பிட
மாகக் கொண்ட சட்டத்தரணி இருபாலை சேனதிராசா முதலியா
ரிடமும் தேவையான மேற்படிப்பைப் பெற்றுக்கொள்ளும் உன்னத வாய்ப்பும்
அன்னருக்கு கிடைத்தது. அன்னரின் அளப்பரிய ஆற்றலுக்கும் நெஞ்சத்தூய்மைக்கும்
அமையத் தகுந்த ஆசிரியர் கிடைத்தது அவரின் பூர்வ புண்ணிய பலனேயாகும்.

நாவலரின் குருநாதரான வித்துவான் சரவணமுத்துப்
புலவரைப்பற்றி நாவலர் நூற்றூண்டு மலரில் அறிஞர்
க. சி. குலரட்ணம் அவர்கள் கூறியது பின்வருமாறு "சரவண
முத்துப் புலவர் கண்டனம் எழுதுவதில் கைதேர்ந்தவர். அவர்
பலகாலமாக வட்டுக்கோட்டையில் இருந்து வெளிவந்த உதய
தாரகை என்னும் செய்தித்தாளில் கஸ்தூரி வேதகிரி முதலி
யாரின் கட்டுரைகளுக்கு கண்டனங்கள் எழுதிவந்தார். எனவே
ஆறுமுகப்பிள்ளை அவர்களுக்கு இளமையிலே கண்டனம்
எழுதும் வரன்முறை நன்கு பழகிய துறையாயிருந்தது.........,'

மேற்படி கண்டனங்கள் உரைநடையிலேயே எழுதப்பட்ட படியால் உரைநடை
பாவனையிலும் இவருடைய உபாத்தியாயர் வழிகாட்டியாக அமைந்திருந்தார். அவ

குடைய குருநாதரான வித்துவான் சேனாதிராய முதலியாருக்கும் மேடைப் பிரசங்கங்கள் புதிதாக இருக்கவில்லை: மேற்படி சரவணமுத்துப்புலவரை ஆறுமுகநாவலர் அவர்களே "கழகப் பிரசங்க சிங்கம்" என விபரித்துள்ளார். வித்துவான் சேனாதிராய முதலியாரே அவரின் வழிவந்த வித்துவான் சரவணமுத்துப் புலவருக்கு பிரசங்கத்துக்கு வழிகாட்டியாய் மிளிர்ந்தார்: ஏனெனில் மேற்படி சேனாதிராய முதலியார் தமிழ் வடமொழி டச்சு போர்த்துக்கீசு ஆங்கிலம் மொழிகளில் கைதேர்ந்தவராக இருந்து அரசாங்க மொழிபெயர்ப்பாளராகவும் பின்னர் சட்டத்தரணியாகவும் அரசாங்க நீதவானாகவும் கடமையாற்றினர். மேலும் அவர் மாதகல், மணப்புலி முதலியார் தலைமையில் தேசவழமைச் சட்டத்தை டச்சு அரசாங்கத்துக்கு நெறிப்படுத்திக் கொடுத்த குழுவினிலும் அங்கம் வகித்த பெருமைக்குரியவர்: எனவே அன்னாருக்கு மேடைப்பிரசங்கம் புதிதல்ல. கம்பன் வீட்டுக் கல்லும் கவிபாடும் என்ற மரபிற்கு இசைய அவரின் மைந்தனாகிய இராமலிங்கபிள்ளை என்பவரே நாவலர் பெருமானின் முதற் பிரசங்கம் 31 - 12 - 1847 இல் வண்ணை வைதீஸ்வர சிவன் கோயிலில் நடத்தும் கூட்டத்திற்கு தலைமை வகித்தார் என்பது பலருக்கு தெரியாதிருந்த விடயமாகும்:

வித்துவான் சேனாதிராய முதலியாரின் குருநாதர்தான் வண்ணார்பண்ணை சிவன் கோயிலை ஸ்தாபித்த வள்ளல் வைத்திலிங்கச் செட்டியாருக்கும் குருநாதராயமர்ந்திருந்த கூழங்கைத்தம்பிரான் என்னும் ஆதீனகர்த்தாவாவர்: அவர் இந்தியாவிலிருந்து வருகைதந்து தான் ஈழத்தில் உள்ள சகல புலவர் பரம்பரையையும் வளர்த்தார் என பொதுவாகக் கூறிவிடலாம். இத்தகைய பெரும் குருசீட பரம்பரைக்கு உரித்தாளராய எமது நாவலர் பெருமான் அவர்கள், மேற்படி குறிப்புக்களுக்கு அமையவே தமிழ் உரைநடைக்குத் தந்தையாவர் என கருதப்படல் வேண்டும் என்றும், இலங்கையில் மட்டுமல்லாமல் இந்தியாவிலும் அப்போது உரைநடை பேச்சிலும், எழுத்திலும் நிலவி வந்தே: எங்கள் நாவலர் பெருமான் இந்தியாவில் செய்த உன்னத பிரசங்கங்கள் மற்றையோரின் பிரசங்கங்களிலும் பார்க்க மிகச் சிறப்பாக இருந்தபடியால் தான் அவர் விசேஷமாக கௌரவிக்கப்பட்டு "நாவலர்" பட்டத்தைப் பெற்றிருந்தார் என்லும், குறிப்பிட்டு ஆனல் மேற்படி உரைநடையை முதன்முதல் பெருமளவில் பொதுமக்களுக்கு பேச்சிலும் எழுத்திலும் பாவனை செய்த பெருமைக்குரியரென்பதும் இந்நூலாசிரியர் கருத்தாகும்.

## நாவலர் சிஷ்ய பரம்பரை

நாவலர் தனது வாழ்நாள் முழுவதையும் கைமாறு உவகாமல் சைவசமயத்துக்கும் தமிழ் மொழிக்கும் முற்றாக அர்ப்பணித்து வாழ்ந்தார். எனவே உலகம் வாழ் சைவமக்களும், உலகம் வாழ் தமிழ் மக்களும் அவர்கள் அனைவரும் நாவலரின் சிஷ்ய பரம்பரைக்கு உரியவரானவரே. எனினும் நாவலர் நூற்றாண்டு விழா மலரில் நாவலரின் குருசிஷ்ய பரம்பரை வெகு விரிவாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதன் முக்கிய பகுதிகள் இந்நூலின் முடிவுரை அத்தியாயத்தில் இடம் பெறுகின்றது.

## நாவலர் தொண்டு

நீறுபூத்தமேனியராய் வீறுகொள் வெம்மையுடன் சூலத்தைத் தாங்கிய செவ்வேளின் செல்வனும் வளர்ந்தார்; மற்றவர்களையும் வளர்க்க அரும்பாடுபட்டார்: இயல்பாகவே தொண்டாற்றினர். அன்னாரின் தொண்டுகளில் முக்கியமானது. அவர் செய்த சிவதொண்டேயாகும்: சிவதொண்டு செய்யும் போது தமிழ்மொழிக்கும் அரும்பணியாற்றினர். சமுதாயத்திற்கும் ஒப்பற்ற சேவை செய்த ஒளிவிளக்காய்த் திகழ்ந்தார். அவருடைய சேவை நாட்டு எல்லைகளைக் கடந்தது. உலகளாவிய கொள்கைகளையும் பரப்பியது.

## நாவலர் படிப்பினை

எமது குழந்தைகளுக்கு உபதேசம் செய்தார்: ஒழுக்கத்தை வளர்த்து சமய வாழ்வு புகட்டினர்: எளிய தமிழில், உரைநடையில் எழுதி சரித்திரம் படைத்தார். தமிழையும் வளர்த்தார்: தமிழில் பதிப்பித்த அவரது சைவ வினாவிடை போன்ற ஆரம்ப சமய நூல்கள் சமயத்தைத் தெளிவுபடுத்தின: ஒழுக்கத்தின் மேம்பாட்டை உயர்த்தின. தன்னம்பிக்கையையும் தெய்வ பக்தியையும் குழந்தைகள் உள்ளங்களில் வேரூன்றச் செய்தன. சகல துறைகளையும் தழுவி எழுதப்பட்ட பாலபாடம் போன்ற புத்தங்களும் பெரியவர்களுக்கும் பயன்படத்தக்கதாக எழுதப்பட்டவை. அஞ்சாமையையும் நேர்மையையும் வீரத்தையும் பக்தி உணர்வையும் ஒருங்கே சொரியும் கந்தபுராண பெரியபுராண திருவிளையாடற்புராண வசனங்களும் போன்றவை அவருடைய பாரிய நோக்கின் பிறப்பாகும்.

## நாவலர் அச்சகத் தொண்டும் சைவப் பிரசாரமும்

இதைவிட அவர் பல பழம் பெரும் நூல்கள் அழியாமல் பதிப்பித்தார்: பிழை இல்லாமல் அச்சடிக்கும் புகழையும் அத்தோடு இணைத்தார்: தமிழ் இலக்கியத்துக்கு இலங்கையிலும், இந்தியாவிலும் காவலனாகத் திகழ்ந்தார்.

அந்தக் காலத்தில் கிறிஸ்தவப் பாதிரிமாரின் சைவ எதிர்ப்புப் பிரச்சாரங்களுக்கு உடன் கண்டனங்களை வெளியிட்டு அவர்களின் வாதங்களை நிலைகுலையச் செய்தார். தொடர்ந்து பாதிரிமாரின் ஆதிக்கத்தின் கீழ் கல்வி நிலையங்கள் இயங்கிவரும் நிலையை மாற்றி அமைப்பதற்காக அருந்தொண்டாற்றினர்; மதமாற்றம் கல்வி மூலம் நடப்பதைத் தடுத்தார்: தானே கல்லூரிகள் நிறுவினர்: யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் தற்போது நடந்து வரும் நாவலர் பாடசாலைகளும் இவரது பலதரப்பட்ட கல்விச் சேவையின் சில சான்றுகளாகும். அக்காலச் சூழ்நிலையில் அரசாங்க ஆதரவுடனும் பணத்திற்காகவும் பதவிக்காகவும் சைவர்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டு வருவதனைத் தவிர்க்க தீவிர சைவப்பிரச்சாரத்தைத் தடங்கலின்றிச் செய்வதற்கு சொந்தமான அச்சயந்திரசாலையை வைத்திருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தார்.

அதற்காக அச்சயந்திரசாலைகளை இலங்கையிலும் இந்தியாவிலும் நிறுவினர். மடங்களை ஸ்தாபித்தார். அவற்றைத் தலைமுறையாகத் தொடர்ந்து நடத்துவிக்கப்

பொருள் சேர்த்து அறக்கட்டளைகளை முன்னின்று நிறுவினார்; அவை குறிப்பாக யாழ்ப்பாணத்திலும், சிதம்பரத்திலும் இப்போதும் இயங்கி வருகின்றன. எனினும் நாவலரின் விருப்பத்திற்கு அவை சீராக நடக்கவில்லை; அவர் வழி நடக்க வேண்டிய சபைகள் இயங்கவில்லை; இதைச் சீர் செய்ய ஆற்றலுடைய பெரியார்கள் முன் வருவார்களாக; இது எமது இளஞ்சந்ததியினரின் பொறுப்பாகும்;

## நாவலர் வழித் தொண்டுகள்

இப்போது நூற்றாண்டு கடந்து வீறு நடைபோட்டுவரும் யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையும், அச்சபை 1902ம் ஆண்டு வரை நடத்திய பின்னர் வேறு சபைக்கு கையளித்துப் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்று தற்போது தேசியக் கல்லூரியாகத் திகழும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் இதரபாடசாலைகளும் கனிஷ்ட பிரிவுகளும் நூற்றாண்டு ஒளிப்பிழம்பின் ஜோதியில் மிளிர்கின்றன. இன்று சில காலம் நூற்றாண்டைத் தொட்ட பத்திரிகைகளான தமிழ் ஆங்கில இந்துசாதனம் Hindu Organ பத்திரிகைகளும், பின்னர் அடுத்த நூற்றாண்டின் அப்போதைய வடமாகாணத்து தமிழ் சட்ட நிருபன சபை அங்கத்தவரால் 1923 இல் ஸ்தாபிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற பல நூற்றுக்கணக்கான சைவ வித்தியாபிவிருத்தி சபை ( Hindu Board of Education ) கல்லூரிகளும் , நாவலரின் பாரிய நோக்கில் அமைந்த பிரச்சார அமைப்பையும் கல்வித் திட்டத்தையும் ஏற்று அன்னாரின் கொள்கைகளைச் செயல்படுத்திய பெரியார்களால் நிறுவப்பட்டு இன்னும் அவரின் நினைவுச்சின்னங்களாக நடத்தப்பட்டு வரும் பெருமை வாய்ந்தவைகளாக இன்றும் திகழ்கின்றன;

## நாவலர் குல தெய்வம்

போர்த்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டு அழிக்கப்பட்டிருந்த நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் கூட நாவலர் பணிப்பின் பேரில் அவரது காலத்தில் அன்னாரது பெருமகன் தம்பு கைலாசபிள்ளை குடும்பத்தினரால் முற்றாகப் புனர் அமைக்கப்பட்டு, இப்போது பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான அவரது குடும்ப ஆதனங்களை அக் கோயில் எழுந்தருளியிருக்கும் காணியாகவும் கொடுபட்டு மேலும் பக்கத்து காணிகளும் வேறு காணிகளும் கோயில் வருமானத்திற்காகவும அவர்களால் கொடுக்கப்பட்டது எதிர்பார்க்கத்தக்கதே. இது ஆரம்பகாலத்திலிருந்தே உள்ள அவரதும், அவரது குடும்பத்தினரதும் தொண்டு மனப்பான்மையை வெளிக்காட்டும் சான்றாக இப்பொழுதும நிலவி வருகின்றது.

## நாவலர் குடும்பப் பெருமை

அவர் குடும்பம் சைவப்பற்றில் ஊறியது. அவருடைய முன்னோராகிய ஞானப் பிரகாச முனிவர் போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டினால் பசுவதைக்கு பசு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் பங்கு பற்ற மனம் பொறுக்காமல் இலங்கையை விட்டு இந்தியா சென்று பெரும் ஞானியாகவும் மிளிர்ந்தார். அப்படி இருந்த குடும்பத்தில் ஆறுமுகநாவலர் அவர்களுடைய அண்ணர் தனது இளம்பிராயத்தில் தனது தம்பியைப் பார்த்து சைவ புராணங்களில் வருபவை எல்லாம் வெறும் கட்டுக்கதை

என கேலி செய்ய பொறுக்கமாட்டாமல் அண்ணையை வெட்ட கொடுவாக்கத்தி கையிலேந்தி விட்டுதுரத்திய வீறு கொண்ட சம்பவம் அவரது ஆழ்ந்த சிவநம்பிக் கையையும் பக்தியையும் எடுத்துக்காட்டும் ஒரு சம்பவமாகும்.

## தற்போது எமது கோலம்

இந்த சிவநம்பிக்கையில் ஊறிய நாவலர் பெருமானைப் பற்றி சிந்திக்கும் பொழுது. சிவநம்பிக்கையை வைத்திருக்காத சிலர் - சைவசமய வரலாற்றில் கூறப்பட்டிருக்கும் அற்புதங்களை உண்மையானவை என ஏற்காதவரும், சைவசித்தாந்த மரபின் பெருமையை உணரமுடியாத நிலையில் இருப்பவருமான கத்தோலிக்க கிறீஸ்தவ பாதிரிமார் போன்றோரிடம் சென்று தமக்கு சைவசித்தாந்தத்தின் விளக்கம் பெறு வதற்குப் பாடம் கேட்டு வருவதும் - அதற்கு பெருமளவில் விளம்பரம் கொடுக்கப் படுவதும் எமது மக்களின் மத்தியில் இன்றும் நிலவி வரும் அறியாமைக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இந்தப் பாடங்களுக்கு பெரும் சைவ ஸ்தாபனங்களில் பதவி வகிக்கும் முக்கியஸ்தர்களும் முன்னின்று படிக்கச் செல்வதும் சைவ மக்களையே நாணமடையச் செய்கிறதே என்பது சொல்லி அறியவேண்டிய விடயமல்ல.

## எமது பல்கலைக்கழகம்

இதுமட்டோ நாங்கள் எல்லோரும் அரும்பாடுபட்டு எமக்கென பல இடையூறு களுக்கு அப்பால் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்தில் ஒரு சைவ சித்தாந்த பீடம் அமைக்க ஒரு பொது மகனைக் கொண்டு பணம் ஒதுக்கி ஒழுங்குகள் செய்து வரும்போது இத்தகைய கிறீஸ்தவ பாதிரியாரையே சைவ போதகாசிரியர் ஆக்கவும் சிலர் முயற்சிகள் எடுக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேடிக்கையாக இருக்கிறதே! எங்கள் சைவஸ்தாபன பெருந்தகையாளர்கள் எங்கள் பல்கலைக்கழக பிரமுகர்கள் உட்பட மதிப்புக்குரியவரெனக் கணிக்கப்படும் கனிசமானோர் தம்மைக் கல்விமான்களெனக் கணித்துக் கொண்டு மேற்படி நடவடிக் கைகளுக்கு நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஆதரவு நல்குபவரையும், எமக்கு ஆறுமுகநாவலர் என்ற அவதார புருடனை அனுப்பின எல்லாம் வல்ல இறைவன் தானே அனுப்பியுள்ளார் என நாம் ஆறுதல் அடையக் கூடியதாக இருக்கிறது.

சைவசமயத்தை போதிப்பது இந்நிலையில் பரிணமித்து வரும் இவ்வேளையில் சைவ சமய உண்மைகளையும் அவ்வுண்மைகளை நிரூபித்து நிற்கும் நாயன்மார்கள் முதலி யோரின் அற்புதச் செயல்களையும் உண்மையாக ஏற்று ஒழுகிவருபவரிடமே சைவ சமயத்தைப் போதிக்கும் பொறுப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற நிலை தெளிவாக்கப் படவேண்டியது இப்போ அவசியமாகும். இதற்கு சைவத்துக்கும் தமிழுக்கும் தொண் டாற்றிய ஆறுமுகநாவலரவர்களின் அருள் துணை நிற்கும்.

## நிறை குட வெற்று விழாக்கள்

இப்போ சைவசமயத்தின் தத்துவப்படி பஞ்ச பூதங்களின் பூரண அருளைப் பெறும் மங்கல சின்னங்களான குத்துவிளக்கு, நிறைகுடம், தேங்காய் முதலியன வைக்கப்படும் மங்கல வைபவங்களில் கூட நிறைகுடத்தில் தண்ணீர் விடாமல் வெறும் காட்சிப் பொருளாக வைப்பது போன்ற மாற்றங்களும் எமது சமுதாயத் தில் ஏற்பட்டுவருவதும் காலவளர்ச்சியின் திசைகாட்டியாக இருக்கின்றது.

ஒரு நிறைகுடம் திரம்பி வழிவதாக இருக்கவேண்டும். எனவே நிறைகுடம் வைக்கும் போது தனது உடல், வாக்கு, காயம் மூன்றும் புனிதமாக்கப்பட்டே வைக்கப்படவேண்டும்! முறையே நிறைகுடத்தின் மேற்பக்கத்தில் மூன்று இடத்திலும் நடுப் பக்கத்தில் மூன்று இடத்திலும். கீழ்ப்பக்கத்தில் மூன்று இடத்திலும் சம இடவெளிக்கிடையில் விபூதி தரித்து விபூதிக்கு நடுவில் சந்தனம் குங்குமம் இட்டு இது போலவே நிறைகுடத்தின் மேல் வைக்கும் தேங்காயையும் அதற்குப் பக்கத்தில் வைக்கும் குத்துவிளக்கையும் அலங்கரித்து வைக்க வேண்டும். விபூதியை பிசாசுகள் பூசும் சாம்பல் என்றும், விபூதியைப் பூசுவது அபசாரம் என்று கூறுபவர்களும் சிவபெருமானின் நெற்றியில் இருப்பது போல பொட்டு வைப்பது கூட அமங்கலம் எனக் கருதுபவர்களும், குறிப்பாக அவற்றைச் செய்யும் சைவ சமயிகள் அஞ்ஞானிகள் என விகாரம் பேசுபவர்களும் கூட நிறைகுடம் நிறுவ முன்வருவது கவனிக்கப்பட வேண்டியதே. நிறைகுடம் திராவிட மக்களின் சின்னம் என்று விளக்கம் தந்து சைவமரபினை பறக்கணித்தால் ஆதியோடு ஆதியாய் சைவமாய் மிளிர்ந்த பண்பாட்டின் அம்சமாய் திராவிடக் கலாச்சாரம் வேரூன்றி வளர்ந்த சரித்திரச் சான்றுகளை நாம் எப்படி புறக்கணித்து வாழ முடியும்? நாவலர் மரபினை உணர்ந்தோர் சைவமும் தமிழும் பின்னிப்பிணைந்துள்ள முறையில் உள்ளது என்ற நிலைப்பாட்டை ஏற்று வருகிறார்கள்.

## உண்மையான ஒற்றுமை

இப்பொழுது உள்ள நெருக்கடியான சூழ்நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் கூடிய ஒற்றுமை தேவையென சுட்டிக்காட்டப்பட்டு வருவது விரும்பத்தக்கதே. இதற்காக கிறிஸ்தவத் தலைவர்களே பொதுவைபவங்களிலே தேங்காய் குத்துவிளக்கு நிறைகுடம் வைக்கும் போது அனைவரும் பங்குபற்றலாம் என்கின்றார்கள். ஆனால் நெறிமுறை பிசகாமல் நிறைகுடம் வைத்தல் அவசியமானது. அங்ஙனம் வைக்க முடியாவிட்டால் இச் சூழ்நிலையில் நிறைகுடம் வைப்பதை தவிர்ப்பதாலே எங்கள் மக்களிடையே கூடிய பரஸ்பர நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் ஆழமாக வளர்க்க அனைவரும் முன்வரவேண்டும் என்பது அடியேனுடைய அன்பான வேண்டுகோளாகும்.

பிரசாரக் காரணியாகவும் காட்சிப் பொருளாகவும் அனைவரும் நிறைகுடம் வைப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பதிலும் பார்க்க எங்கள் அனைவருக்கும் பொதுவான பண்டைத் திராவிட பண்பாட்டை பின்பற்றி நாங்கள் ஒரு மரணச் சடங்கிற்குச் சென்றால் அல்லது தலைமயிர் வெட்டினால் அணிந்திருந்த ஆடைகளை கழற்றி துவைக்க போட்டுவிட்டு குளித்துவிட்டே வீட்டிற்கு செல்லும் வழக்கம் போன்ற விடயங்கள் மூலம் நாங்கள் கூடியளவு ஒற்றுமை நிலையை உறுதிப்படுத்த முடியும். ஆனால் ஏதோ காரணத்தினால் இந்தத் திராவிட பண்பாட்டிற்கு இது ஒரு சைவக் கிரியை என்றும் இதனை கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை என்ற சிந்தனை பாவப்பார்க்கிறது. இது மிகுந்த குழப்ப நிலையை உருவாக்கி வருகிறது. எமது நாவலர் பெருமான் சிந்தனைப்படி ஆராய்ந்து இதனை எமது சமூக சீர்திருத்த வாதிகளின் சவனத்திற்கு அடியேன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த பிரச்சனைக்கு எழ நியாயமான சமூகரீதியான காரணம் உண்டு. எமது கிறீஸ்தவ தேவா

லயங்களில்ஐரோப்பிய நாடுகளில் பனி காலங்களில் குளிக்க இயலாத சூழ்நிலைகளில் கையாளப்பட்ட முறைகளை பின்பற்றி அத்தேவாலயங்களில் நடக்கும் மரணச்சடங்குகளுக்கு செல்வோர் தமது உடுப்புக்களைத் துவைக்கவோ அல்லது தாம் வீட்டுக்குச் செல்லும் பொழுது குளிக்கவோ நிர்ப்பந்திக்கப்படுவதில்லை. இது கிறீஸ்தவர்களுக்கு சமயகோட்பாடாக அமையவில்லை என்பது உண்மையே. இதனால் ஒரு மரணச் சடங்கு நடந்த கிறீஸ்தவ தேவாலயம் அக்காரணத்திற்காக கழுவப்பட்டு பின் வேறு தேவைகளுக்குப் பாவிக்கப்படுவதில்லை. அதே இடத்தில உடனே ஒரு திருமண வைபவத்தையும் நடத்துவதில் ஒரு தடையும் இல்லை. இதனால் எமது திராவிட பண்பாட்டின் இறுக்கம் ஐரோப்பிய கலாச்சாரக் கலப்பால் நெகிழக் கூடிய சூழ்நிலை ஏற்படுவது இயற்கையே. இதனால் எமக்குள்ள இருசமய அன்பர்களும் அன்னியோன்னியமாகப் பிணங்குவதற்கு ஆசுச விதிகள் பற்றிய பிரச்சனை எழுவது மட்டுமல்லாமல் தீவிரமாக இவ்விதிகளில் நம்பிக்கை கொண்டவர்களுக்கு சில கிறீஸ்தவர் நடைமுறைகளைப் பார்க்க அருவருப்பாகவே தோன்றும். இது தவிர்க்க முடியாததே. இந்த உள் மனது வேறுபாடுகளை பகிரங்கமாக கிறீஸ்தவர்கள் தாமும் நிறை குடம் வைக்க முன்வந்து சந்தனம் பொட்டு அணிந்து காட்டித் தீர்க்க முன்வருதலிலும் பார்க்க எமது கிறிஸ்தவ அன்பர்கள் அனைவருடைய ஸ்தாபன ரீதியான ஒத்துழைப்புடன கிறீஸ்தவ தேவாலயங்களில் மரண வைபவங்கள் நடந்தால் அத்தேவாலயத்தை உடன் கழுவியும் அங்கு பிரசன்னமாயிருப்போரை குளித்து விட்டு தமது உடுப்புக்களை துவைக்கப்போட்டு இல்லங்களுக்கு செல்வதற்கும் ஒழுங்குகள் செய்வது பெரும், ஒற்றுமைக்கு வழிகாட்டியாக நிலவும். போத்துக்கீசர் காலத்திலும் டச்சுக் காலத்திலும் பதிவேடுகளிலும் நூற்றுக்கு நூறு வீதம் எமது பிரதேசம் கிறீஸ்தவசமயமாயுள்ளது என பதிந்திருந்தாலும் இப்போ கிறீஸ்தவ மதத்தினர் நூற்றுக்கு பத்து வீதத்திற்கு உட்பட்டவரே உளர். இந்த பத்து வீதத்தினர் மற்றைய சைவ மக்களுடன் ஒத்துழைத்து மேற்படி பண்டைய திராவிட கலாச்சார முறைப்படி மேலதிக சுத்த நடவடிக்கையை பரிபூரணமாகவும் இயலுமானால் ஸ்தாபன ரீதியாகவும் கையாண்டால் அது எமது மக்களிடையே உண்மையையும் உறுதிப் பிணைப்பையும் மேலும் அதிகரிக்கும்.

## எமது இளைஞர்கள்

நாவலர் பெருமானின் சிந்தனை வழியில் பொருந்திவரும் மேற்படி கருத்தினை எமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக தமது உயிரையே அர்ப்பணிக்குமளவிற்கு பாடுபட்டு வரும் இளஞ்சந்ததியினரின் தீவிர ஆராய்ச்சிக்கு நான் சமர்ப்பிக்கிறேன். இதனை உடன் அமுல் நடத்தி இதன் மூலம் மக்களிடையே உண்மையான உள்ளன்பும் கடும் ஒற்றுமைப் பிணைப்பும் உண்டாகி சகல மக்களிடையேயும் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் கூடியதாக ஏற்பட்டு எமது மக்கள் உச்சநிலை அடைய இறைவன் அருள்புரிவானாக.

## நாவலரின் புலமைத் தகமை

இதைவிட அறுமுகநாவலர் அவர்கள் ஈழத்துப் புலவர் வரிசையில் முன்னணியில் நிற்பவர் என்பதற்கு உரிய முக்கியத்துவம் பிரச்சாரரீதியாக கொடுபடாமல் இருந்து வருவதும் நாம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆறுமுகநாவலரவர்கள் தெய்வபக்தி மிக்கவர். தனது கவிதையாற்றலை குறிப்பாகத் தெய்வீக இலட்சியத்துக்கே அர்ப்பணிக்கும் ஆவலைக் கொண்டிருந்தார்.

உதரணமாக ஆறுமுகநாவலர் அவர்கள் தனது வீட்டுக்கு அருகில் எழுந்தருளியிருக்கும் நல்லூர் கைலாசபிள்ளையாரை நோக்கியும் தனது கிராமத்தில் வழிபட்டு வரும் நல்லூர் கந்தசுவாமியார் மீதும் அவர் பொழிந்த கவிதைகளையும் மற்றும் அவரது படைப்புக்களையும் நாம் சைவத்தமிழ் பொக்கிஷங்களாகக் கொள்ளலாம். அவருடைய பக்தி ஆழமானது. அவருடைய பாடல்கள் அருள்மயமானவை. அவருடைய சிந்தனை மேன்மையால் பொருள் நயமும் தத்துவச் சுவையும் கரைபுரண்டோடும். தமிழாற்றல் பெருக்கத்தால் சொல் நயமும் ஓசை நயமும் ஒருங்கே பொதிந்திருந்ததைக் காணலாம். இருவருடைய ஒப்பற்ற கவிவன்மையை முற்றாக ஆரய்வது முக்கியமாகும்; எனினும் இச்சிறிய நூலில் அவற்றை அடக்க இயாலாமைக்கு வருத்துகிறேன்.

எனது வாசகர்களின் நன்மைக்காக நாவலர் பெருமானின் ஒரு சில தெய்வீக வீறு கொண்ட செந்தமிழ் கவிதைகளை வாசகர்முன் சமர்ப்பிக்கின்றேன். இவை நாவலரின் தெரிவு செய்யப்பட்ட கவிதைகள் சேர்த்து பிரதி பண்ணிய இந்நூலின் மூன்றும் பகுதியில் தரப்படுகின்றன.

## நாவலர் தர்மங்கள் நிவர்த்திசெய்யப்பட வேண்டும்

நாவலரின் தொண்டுகளை நாம் தொடர்ந்து செயலாற்றுவது எமது தலையாய கடமையாகும். யாழ்ப்பாணத்து நாவலர் வித்தியாசாலையும் அத்துடன் சேர்ந்த சைவ கல்வி முறைகளும் இப்போ போதியளவு சிறப்பாக நடைபெறவில்லை. இதனை எமது கல்வி இலாக உட்பட சைவப்பெரியார்கள் கவனத்திற் கொள்வார்களாக. இப்போதுள்ள போராட்ட சூழ்நிலையாலும் பொருளாதாரத் தடையாலும் கஷ்டப்படும் இந்நேரத்தில் நிவர்த்திதரும் நீதிமன்றங்கள் இல்லையே என்ற எண்ணத்தாலும் நாவலர் நெறி நின்று ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரியம் மிக்க பழம் பெரும் சபைகளில் அதன் தொண்டுப் பகுதிகளும் பிரசாரப் பகுதியும் செயலிழக்கச் சிலர் திட்டமிடுவதும் வருந்தத்தக்கதே. இது அற்புதமானதல்ல நாவல பெருமான் கூட தனது வாழ்நாளில் தனக்கு இடையூறாக உள்ளவர்கள் மதம் மாற்றவந்த புறச்சமயிகள் அல்ல, ஆனல் குறிப்பாக தனக்கு இடையூறு செய்பவர்கள் எம்முடன் வாழும் எமது சைவசமயிகளே என்று மனம் வருந்தியுள்ளார். இந்தச் சூழ்நிலையில் அவர் இத்தகைய சைவர்களிடம் வேண்டிக் கொண்டது ஒன்று தான். நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாது இருங்கள் என்பதேயாகும். இதனை எமது சைவமக்கள் நினைவில் வைத்திருத்தல் நன்மை பயக்கும். காலாகாலமாக வந்த தடைகளையும் தாண்டி இடர்களை களைந்து போத்துக்கேயரின் கொடுங்கோல் அக்கிரமத்தாலோ அல்லது டச்சுக்காரரின் சமய மாற்ற உக்கிரத்தாலோ அல்லது ஆங்கிலேயரின் மாற்றாந்தாய் பராமரிப்பாலோ அல்லது சிங்கள இராணுவ பௌத்த பேரினவாத குண்டுவீச்சு அதிரடியாலோ எமக்கு அழிவு ஏற்படவில்லை. எவராவது சிவபூமியாகிய இலங்கையிலிருந்து சைவத்தையோ அல்லது தமிழையோ அல்லது எமது திராவிட கலாச்சாரத்தையோ மாசுபடுத்தாவண்ணம் இறைவன் அருள்புரிவானே. இது உண்மையே உண்மை.

## நாவலரின் இந்திய தர்மங்கள்

மேலும் இந்தியாவை நோக்கின் அங்குள்ள சிதம்பர வித்தியாசாலையும் மடமும் அதைதொட்ட அச்சகமும் பெருந்தொகையான நிலமும் சரியாக பரிபாலிக்கப் படாமல் அவர் வழிவகுத்து தந்த இலங்கை பிரதிநிதிகள் கூட செவ்வனே செயற் படாமல் சீரழிந்த நிலையையும் நாம் சீராக்க கடமைப்பட்டுள்ளோம்.

## நாவலரும் இராமலிங்க சுவாமிகளும்

இதே போல் நாவலரின் காலத்திலேயே இந்தியாவில் அருட்பாக்களாகிய தேவார திருவாசகங்களுக்கு ஒப்பாக தாம் பாடிய மருட்பாக்கள் உள்ளன, எனக் கூறிய இராமலிங்க சுவாமிகளுக்கெதிராக சென்னை நீதிமன்றம் வரை வழக்காடி முடிவு கண்ட தூய சிவபக்தராய, நாவலர் அவர்கள் எப்பொழுதும் சிவபெருமானையே சிந்தித் தார். அவர் முழுமுதற்கடவுள் என ஏற்று ஒழுகி வந்த தூய பரந்த சைவநெறியை பேணி சைவ ஸ்தாபனங்களை பாதுகாக்கவும் பாடுபட்டார். இது நாவலரின் மதாபிமா டின் மற்றொரு அம்சமாகும்.

## திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும்

நாவலரின் திட்டத்தின் படியே அந்நியரால் அழிக்கப்பட்ட திருக்கேதீச்சர ஆலய மும் வண்ணார்பண்ணைப் பசுபதிச் செட்டியார் அவர்களால் புனரமைக்கப்பட்டு இப் பணி இப்போது பொதுச்சபையினரால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. திருக்கோணேஸ்வர ஆலயத்தை புனருத்தாரனஞ் செய்யவும் ஆவலோடிருநதார்: ஆனல் போர்க்காலச் சூழநிலையில் இன்று மேற்படி ஸ்தலங்கள் மூடப்பட்டிருந் தாலும் நாவலர் பெருமானின் விருப்பம் நிறைவேறியேதீரும் என்பது திண்ணம்.

## நாவலரும் நல்லூரும்

நாவலர் பெருமான் அந்தக் காலத்து நல்லூர் ஆலயத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சீர்திருத்தங்கள் செய்யக்கோரிய பிரசங்கங்கள் ஆணித்தரமானவை. இவர் ஆக்கிய நூல்களை விட இவரது மேடைப்பேச்சுக்கள் வேகம கூடியவை. ஆழ மான தெய்வ சிந்தையுடன் உக்கிரமாக யதார்த்தரீதியான அநல் பறக்கும் கருத்துக் களை அள்ளிப் பொழியும் ஆற்றல் அவருடையதே. நல்லூரில் அவர் வைத்த அன்பால் அதன் சீர்திருத்தத்திற்காக பாடுபட்டார். தனது பேச்சுக்களிலும் இவற்றை குறிப் பிட்டிருந்தார்.

## நாவலருக்கு அவமரியாதை

இன்று நல்லூரில் அவர் வழங்கிய காணியில் பிரதிஷ்டை செய்த அவர் சிலை இரவோடிரவாக அகற்றப்பட்ட அவமரியாதை நீக்கப்படவேண்டும். ஆனல் நிவர்த்தி என்ற கோஷத்துடன் நல்லூர் ஆலயப் பெருமையும் குன்றாமல் செயற்பட வேண் டும என்பது இந்நூலாசிரியர் கருத்தாகும்.

நல்லூர் கோயிலுக்கு அவர் விரும்பிய ஒரு சில சீர்திருத்தங்களும் இன்னும் செயல்படவில்லை அன்னவரது அன்பான அனுசரணையுடன் செய்வதும் அவசியமாகும்.

## நாவலரின் பேச்சு வன்மை

அவருடைய பேச்சுக்கள் கேட்பாரைக் பரவசப்படுத்தி ஈர்க்கும் காந்த சக்தி யுடையவை. அறியாமையைப் போக்கி உண்மைகளை விளங்கக் கூடிய வகையில் பேசும் ஒப்பற்ற ஆற்றல் கொண்டிருந்தார். அவற்றிற்கு உதாரணமாக அன்னாரின் பேச்சுக்களையின் ஒரு துளியையேனும் எமது வாசகர் நுகரும் பொருட்டு பின்வரும் நாவலரின் பிரசங்கத்தின் ஒரு பகுதி இச் சிறு நூலில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றது.

**யாழ்ப்பாணத்துச் சைவ சமயிகளே!**

பதியினது விளக்கம் அறிவொரு சிறிதுமில்லாத கல், வெள்ளி செம்புகளிலே அதிகமா? அப்பதியினது இலக்கண முதலியவற்றை யதார்த்தமாகவே அறிவிக்கும் பேரறிவே வடிவாய தேவார திருவாச கங்களிலே அதிகமா? முன்னையவைகளிலும் பார்க்க பின்னையவை களில் அநந்தகோடி படங்கதிகம். இன்னும் கல், வெள்ளிச், செம்பு களிலே பதியினது விளக்கம் மந்திரநியாசத்திற்குப் பின்னன்றி முன் னில்லையே! தேவார திருவாசகங்களோ பஞ்சாட்சர மந்திரத்தையும் அப்பஞ்சாட்சர முதலிய சகல மந்திரப் பொருட்களையும் உள்ளடக்கி நின்று சித்தி முத்தி சித்திப்பிக்கும் மகாமந்திர வடிவமேயாதலால் அவைகளில் பதியினது விளக்கம் நித்தியமென்பது சத்தியமாமே! இன்னும் எத்தனையோ அளவிறந்த காலம் எத்தனையோ அளவிறந்த மகான்களாலே மந்திரநியாசஞ் செய்யப்பட்டு அவ்வப்போது அவ் வவர்க்குப் பதிவிளக்கம் பெரிது சித்திக்கப் பெற்ற சுயம்புலிங்க, காணலிங்க, வைதிக லிங்க, ஆரிடலிங்கங்களுள்ளும், எவை விசேட முடையன? தேவார திருவாசக மேற்றப்பட்ட இலிங்கங்களன்றே. இவ்வுண்மை சிவபுராணங்கலாலும் தேவார திருவாசகம் பற்ற சிவஸ்தலங்களில் விசேட வழிபாடு காட்டும் பெரியோர்களுடைய அனுட்டத்திலும் இனிது விளங்கும்.

இன்னும் மதுரை முதலிய திருப்பதிகங்களில் இலிங்கம் முதலிய திருமேனிகள் இருந்தும் என்னை! ஆலயம் மண்டபங் கோபுரந் திரும திலாதிகள் இருந்தும் என்னை! திருவாபரணாதிகள் இருந்தும் என்னை! பூசை திருவிழாக்களுக்கு விளைநிலந் தோட்டங்கள் இருந்தும் என்னை! மடங்களும் ஆசாரிகளும் சந்நியாசிகளுமிருந்தும் என்னை! எத்தனை யோ லட்சப் பிராமணர்கள் விலாப்புடைக்க அன்னம் புசிக்குஞ் சத்திரங்கள் இருந்தும் என்னை! அந்தப் பிராமணர்களாலே வேதபா ராயணம் நிகழ்ந்தும் என்னை! அருக சமயமும், புத்தசமயமும் எங்குந்

தலைப்படத் தலைப்பட சைவம் குன்றியகுன்றியபொழுது இவைஎல்லாங் கூடியும் அப்புறச் சமயங்களை ஒட்டிச் சைவத்தை நிலைநாட்டினவா? இல்லையே! பின்பு அது செய்தவை யாவை? தேவார திருவாசகங்களன்றோ! இவ்வுண்மையை நீங்கள் அறியீர்களா? பெரியபுராணம் திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் கேட்டதில்லையா? இவை படிக்கப்பெறாத கோயில்களும் கோயில்களா? இவை படிக்கப் பெறாத மடங்களும் மடங்களா? இவை அறியாத கோயிலதிகாரிகளும் கோயிலதிகாரிகளா? இவை அறியாத பிராமணர்களும் பிராமணரா? இவை அறியாத சைவாசாரியார்களும் சைவாசாரியர்களா? இவை அறியாத சைவர்களும் சைவர்களா?!

நீங்கள் சைவசமயிகள் என்பது சத்தியமேயானால் அச்சமயத்தை நாட்டி இணைத்துப் பெருஞ் சிறப்பினவாக்கிய தேவார திருவாசகங்களிலே உங்களுக்கு விசுவாசம் இராதா? விசுவாசம் இருப்பது சத்தியமேயானால் இந்தக் கந்தசுவாமி கோயிலிலே இக்கோயிலதிகாரியினாலே இத் தேவாரத் திற்த அவமானமும் வேதபாராயனம் நடவாமைக்கு ஏதுவாய உயிர்கொலையும் செய்யப்பட்ட பொழுது நீங்கள் மனம் பதைபதைத்தீர்களா? மனம் பதைபதைத்தது சத்தியமானால் நீங்கள் எல்லாங் கூடி உங்கள் பொருள் கொண்டு தானே சீவிக்கிற இக்கோயிலதிகாரியைப் பார்த்து 'நீ இவ்வதி பாதகமான சிவத்துரோகம் செய்ததனால், இனி நாம் ஒரு பொழுதும இச் சிவத்துரோகத்துக்கு இடமாய இக்கோயிலுக்கு வரோம்! இங்கே பூசை திருவிழா உருத்திராபிஷேகம் செய்வியோம். உண்டியலிலே பணம் இடோம்! காவடியெடோம்! அருச்சனை செய்வியோம்! மாவிளக்கிட்டுப் பணந் தரோம்! எல்லாரும் உதவிய எல்லாவகைப் பொருள்களும் கொண்டு நடத்தப்படும் இக்கோயிலை வழுவற நடத்துவதற்கு நீ யோக்கியை இல்லை என்று உன்மீது வழக்கு தொடுப்போம்! என்று பத்தியாவேசங் கொண்டு கண்டித்து இவையே கடைப்பிடியாகக் கொள்வீர்களா? கொண்டீர்களானால் வயிற்றுப் பிழைப்புக்கு ஊறு வருகின்றதே என்று பயந்தாயினும் இக்கோயிலதிகாரி திருத்தமடையானா?! விளைந்த குற்றமெல்லாம உங்களிடத்தனவே. ! ......... ''

ஆலய நிர்வாகத்தினர் உடன் எதிர்ப்பைக் காட்டினாலும் பின்னர் படிப்படியாக வ நடைமுறை சீர்திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தமை நோக்கத்தக்கது. நல்லூர் கோயிலில வைத்த அன்பின் நிமித்தம் கோயில் திருப்பணிக்காக இந்தியாவில் இருந்து பெரும் கருங்கற்களை பொதுமக்கள் மூலம் பறிப்பித்திருந்தார். மிநக பணி நிற்பாட்டப்பட்டு அவரே திருப்பணிச்சபை தலைவராக்கப்பட்டு கோயில் அதி

காரியின் அழைப்பின் பேரில் நல்லூர் வசந்த மண்டபத்தில் சற்பிரசங்கம் செய்தருளினார். ஆனால் சில விஷமிகள் ஒரு நாள் மிருகபலி கொடுப்பித்ததை அடுத்து அக் கோயிலுக்கு போகாது விட்டார்.

குறிப்பு: நாவலர் இறந்த பின்னரே நல்லூர் கோயில் சம்பந்தமாக பொதுமக்களால் வழக்குத் தொடரப்பட்டது. அவ்வழக்கில் கோயில் நிர்வகிக்க மனேஜர் பரம்பரை தொடரப்பட வேண்டும் என்றும் ஆனால் நல்லூர் கோயில் பொதுக்கோயில் எனவும் கணக்குகள் காட்டப்பட வேண்டும் எனவும் தீர்க்கப்பட்டது. இருசாராரும் இதனை தமது வெற்றியென கொண்டாடினர்.

## சிதம்பரத்திலும் சீர்திருத்தம்

இதேபோல் சிதம்பரத்து ஆலயத்துச் சீர்கேடுகளையும் அந்தணர்களது நடத்தைக் குறைவுகளையும் மிகுந்த எதிர்ப்பின் மத்தியில் எடுத்தியம்பி தனது அஞ்சா நெஞ்சத்தையே உறுதுணையாகக் கொண்டு மாசுகளை நீக்கினர்.

## தருமை ஆதினத்தில் கௌரவிக்கப்பட்டமை

இலங்கையின் வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் மண்டபத்தில் செய்து வந்த பிரசங்கங்களும் முன் மாதிரியானவை. அவற்றின் வேகமும் ஆழமும் அனைவரையும் கவர்ந்தது அவர் அத்தகைய பிரசங்கங்களை இந்தியாவிலும் செய்யும் போது அதனால் வசீகரிக்கப்பட்ட திருவாவடுதுறை ஆதின தர்மகர்த்தா சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் அன்னாருக்கு "நாவலர்" என்ற சிறப்புப் பட்டம் அளிக்க நேர்ந்த சம்பவமும் நாவலர் பெருமானுக்கு மட்டுமின்றி ஈழத்து மக்களுக்குப் பெருமையைத் தருகின்றது. இவருடைய சமயத் தொண்டும் மொழி வழிச் சேவைகளும் இலங்கை எல்லையைக் கடந்து இந்தியாவுக்கும் பரவியிருந்தது இயல்பானதே.

## அரசியல் பொது சேவையிலும் நாவலர்

இலங்கை அரசியல் துறையில் கூட துவைனம் அரசாங்க அதிபரின் துர்நிர்வாகத்தையும் அவருடன் சேர்ந்து பணமோசடி செய்த அரச உத்தியோகஸ்தர்களின் விவசாயிகளுக்குரிய வரட்சி நிவாரணக் கொடுப்பனவுகள்பற்றிய நம்பிக்கை துரோகத்தினையும் மகா தேசாதிபதிக்கு எடுத்துக் காட்டி அஞ்சா நெஞ்சத்துடன் உரிய நிவர்த்தியும் நிவாரணமும் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுத்த பெருமை ஆறுமுகநாவலருக்கு உண்டு.

ஜனநாயக சுதந்திர இலங்கையின் அரசியல் தந்தையாகப் போற்றப்படும் அந் நாளில் சைவ தமிழ் மக்களின் தலைவருமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அரசியல் சட்ட நிருபணசபை அங்கத்தவராக நியமனம் பெற முக்கிய பிரச்சாரம் செய்து வெற்றி கண்டவரும் ஆறுமுகநாவலர் அவர்களே.

## நாவலரின் சைவசமய சமூக சமத்துவ சேவைகள்

அவர் சமூக சேவையில் ஈடுபட்டு தனது உயிருக்கு வரும் ஆபத்தையும் பொருட்படுத்தாது தொழுநோயாளர்களுக்கு சரீரசேவை செய்த தொண்டு அவர் சைவ சமய அடிப்படைக் கொள்கைகளை நடைமுறையில் செயலாற்றும் சான்றாக அமைத்

து. தொழுநோய் கலாரா நோய் வந்தவர்களுக்கு அவர் பயமின்றி சாதாரண
மாக சேவை செய்வதோடு நில்லாமல், பஞ்சம் வந்து மக்கள் கஷ்டப்பட்ட நேரத்
தில் சைவமதக் கோட்பாடுகளை உண்மையாக விளங்கி சாதி மதவர்க்க இன பாகு
பாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில், பொதுமக்களுக்கு பொருள் (சேர்த்து கஞ்சி
வார்த்து (கஞ்சி தொட்டி தர்மம் செய்து) பல்லாயிரக்கணக்கான மக்களுடைய
பசிப்பிணியை போக்கி நடைமுறையில் சோஷலிசதத்துவத்தின் அடிப்படையை
அன்றே மார்க்சிய தத்துவம் பிறக்க முன்னரே அதன் கருப்பொருளை எமது நாட்டில்
நெறிப்படுத்திக் காட்டியவரும் ஆறுமுகநாவலர் என்றால் மிகையாகாது.

## 2. மேலும் ஆராய்ச்சிக்குரிய பகுதி

### அ) நாவலரும் விவசாயமும் - அவரின் மண்ணைக் காக்கும் பணியும்)

ஆறுமுகநாவலர் அவர்கள் தூயசமயத் தொண்டாற்றிய பெருமகன் மட்டுமல்
லாமல் மேல்கூறிய படி அக்காலத்திலேயே எமது அரசியல் பொருளாதார கல்வி
மொழி பண்பாட்டு வளர்ச்சிக்கும் மிகுந்த தூரநோக்குடன் உழைத்தார். ஒரு
சுதந்திர சமதர்ம சமுதாயத்தில் மனிதன் வாழ வேண்டும் என விரும்பினார்.
அனைவரும் அந்நிலையை எய்த ஆவன தொண்டாற்றினர் என்பது இவரது பரந்த
சைவத்தொண்டின் பெருமையாலே ஓரளவு மறைக்கப்பட்டிருந்தது எனலாம்.
இதைவிட இவரது பணியின் பெருமை பிரசாரரீதியாகவும் திட்டமிட்டே மழுங்கடிக்கப்
பட்டது எனலாம். தாம் சிவபதமடைவதற்குச் சில காலங்களுக்கு முன்பு இலங்
கையில் கிழக்கு மாகாண கந்தளாய் குளத்தடியைச் சேர்ந்த “போட்டர் காடு”
என அரசாங்க உலாந்தா படத்தில் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தில் ஈராயிரம்
ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட ஒரு பகுதியைப் பெற்று அதனை அடிப்படை விவசாய
நிலமாகக் கொண்ட ஒரு தமிழ்மக்கள் அனைவருக்கும் உரிய விவசாயக் கம்பனியை
சாதி, சமய வேறுபாடற்ற முறையில் ஸ்தாபிக்கும் ஆரம்ப நடவடிக்கைகளை 1879ம்
ஆண்டிலேயே எடுத்தார். இது பலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம் ஆனால் உண்மை
பே. இது அவரது தூரநோக்கை எடுத்துக்காட்டுகிறது. சைவத்துடன் தமிழ் மண்ணை
வளப்படுத்திக் காக்கும் தீர்க்கதரிசனமிக்க ஞானியாகவும் செயலாற்றல் கொண்ட
வீரனாகவும் விளங்கினர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக நிலைநிற்கின்றது.

வடக்கும் கிழக்கும் இணையும் வண்ணம் நாவலர் அன்றே நடவடிக்கை எடுத்தார்.
இப்போ வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி மேல்மட்ட அரசியல் மகாநாடுகளும்-வடக்கு
கிழக்குடன் தனிநாடு பிரித்தெடுப்பது பற்றி உக்கிர போராட்டமும் நடக்கின்றதே
என்றபோது அவரது தூர நோக்கு புலனாகின்றது.

குறிப்பு:- இலங்கை பல்கலைக்கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் திரு. ச. தனஞ்
செயராஜசிங்கம் M.A. அவர்களின் நாவலர் பணிகள் என்ற நூலில் நாவலர்
பெருமான் ஸ்தாபித்த கம்பனி பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளது.

மேற்படி கிழக்கு மாகாண விவசாய முன்னிலைக்கும் முதல் வழிகாட்டியாக
மிளிர்ந்த “போட்டர் காடு” என்ற பிரதேசம் இந்நூலாசிரியரின் தாய்வழிப்
பூட்டனாராலேயே இலங்கையில் ஆங்கில ஆட்சியின் ஆரம்ப காலத்திலேயே விவசாய
நிலமாக்கப்பட்டு, அதற்காக அவரால் விவசாயத்துறைக்கு ஏற்பட்ட முன்னேற்றத்

திற்கும் அன்னாரின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை நினைவு கூரும் வண்ணமே அவருடைய நாமத்தை ஏற்று 'போட்டர் காடு' என்ற பிரதேசமே அரசாங்கத்தால் பெயரிடப்பட்டதும் வரலாறுதும். இதை இந்நூலாசிரியர் குறிப்பிடும் வகையில்

"வனம்மாற்றி வயலாக்கி வாவிகளும் குளமாக்கி
பனம்பாத்தி பயிராக்கி பரந்தகடற் தொழிலாக்கி
இனங்காத்து ஈழத்தை இயந்திரமா மயமாக்கி
தனங்காத்து தமிழர்நிலை தடங்காக்கும் நிலைஅருள்வாய்."

என்று நாம் வழிபடவேண்டிய அந்தர நிலையினுக்கு தள்ளப்பட்ட இந்நேரத்தில் ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு முன்னர் நாவலர் உறுதியாக எடுத்த நடவடிக்கைகளும் பெருமை அளிக்கின்றன. அந்தப்பணியை கூடியபெரிதாக மதித்த நாவலர் பெருமானின் பரந்த விசாலித்த பெருமையின் தன்மையை உள்ளத்திலே உணரக்கூடியதாக இருக்கின்றது. எமது ஈழ மண்ணின் பெருமை பரவும் வண்ணம் 19-ம் நூற்றுண்டில் ஆரம்பித்த நாவலர் பெருமானின் ஒப்பற்ற பணிகள இப்போ முடிவடையும் இருபதாம் நூற்றுண்டுக்கு மட்டுமல்லாமல் இனி வந்து கொண்டிருக்கும் இருபத்தோராம் நூற்றுண்டிற்கும் அதற்குப் பின்னரும் கூட உறுதுணையாய் நின்று எங்கள் அனைவரையும் ஆதியும் அந்தமும் இல்லா எமது பிரிக்க முடியாத நெறியையும் ஒப்பற்ற மொழியையும் உன்னத நிலை அடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் குறிக்கோளுக்கு அமைய

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

என வழிபடுவோமாக.

## 2 மேலும் ஆராய்ச்சிக்குரிய பகுதி

### ஆ.) நாவலரும் சாதிப்பிரச்சனையும்

ஆறுமுகநாவலரவர்கள் இன்றிலிருந்து ஒன்றரை நூற்றுண்டுகளுக்கு முன்னரே சாதிப்பிரச்சனையை நேரில் தீர்ப்பதற்கு அரும்பாடு பட்டார். அன்னிய அரசாங்கங்களும் அவை அங்கீகரித்து அமுல் நடாத்திய சட்ட முறைகளும் கூட சாதிப்பாகுபாட்டை நேரில் ஏற்று வந்த காலம் அக்காலம். கிறீஸ்தவ சமய கோட்பாட்டின்படி சாதிப்பாகுபாட்டுக்கு ஒருவித இடமும் இல்லை என்பதை யாவரும் அறிவார்கள். அப்படி இருந்தும் அக்காலத்தில் சமூகத்தில் இருந்து வந்த சாதிவேறுபாட்டை நேராக எதிர்க்க முடியாமல் கிறீஸ்தவப் பாதிரிமார்களே சாதிரீதியான முறையில் வழிபடுவதற்கு வெவ்வேறு சாதியினருக்கும் பிறம்பாக கிறீஸ்தவ ஆலயங்களை அமைத்து சமயத்தை வளர்க்க நடவடிக்கைகள் எடுத்து வந்த காலம் அக்காலம். இந்தச் சூழ்நிலையில் இருந்து வந்த சமுதாயத்தில் தான் நாவலர் பிறந்தார். தான் வளர்ச்சியடைந்து சைவநெறியின் விற்பன்னராக சிவப்பிரச்சாரம் செய்துவந்த ஆறுமுகநாவலரவர்கள் "ஒருவன் தனது குணத்தாலும் நடத்தையாலும் தான் உயர்ந்த அல்லது தாழ்ந்த சாதிமானுகின்றான்" என்ற அடிப்படை கோட்பாட்டை தெளிவாக விடுத்துள்ளதை பலர் அறியாமல் இருக்குமளவிற்கு ஆறுமுகநாவலரின் உண்மை இயல்புகள் பிரச்சார ரீதியாக இருட்டடிக்கப்பட்டுவந்த விடயம் பல ஆண்டு

களாக நீடித்து வந்ததைக் கூட ஆராய்ச்சி நோக்குள்ளோரால் நுணுக்கமாக பரிசீலிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என நான் கருதுகிறேன்.

இந்த முற்போக்கான கருத்துக்களை உலகிலேயே 19-ம் நூற்றாண்டில் நிலைநாட்டிய நமது சமய குரவரின் தூரநோக்கைப் புரியாமல், ஒரு சிலர் "ஆறுமுக நாவலர் அவர்கள் சாதி வேறுபாட்டைத் தூண்டுவதற்கு ஏதுவானர்." என கருதுவது எவ்வளவுக்கு உண்மையற்றது என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் காட்டும் கடமையும் எங்களுடையதே என நான் கருதுகிறேன். இவ்விடயம் தொடர்பாக சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரனார் அவர்கள் ஆறுமுகநாவலரைப் பற்றி எழுதி யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையினரால் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் 1951ம் ஆண்டு பதிப்பித்து வெளியிடப்பட்ட நூலில் பின்வரும் வசனம் ஆறுமுகநாவலர் அவர்களால் கூறப்பட்டது என்பது ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளது. அந்தக் கூற்றை அப்படியே எனது வாசகர்முன் வைப்பதுதான் இப்பொழுது நான் செய்யக்கூடிய தொண்டு என கருதுகிறேன். அந்தக் கூற்று பின்வருமாறு:-

"Among Brahmins' there are Brahmins, Kshatriyas, Vaishyas and Sudras Among Kshatriyas there are Brahmins, Kshatriyas, Vaishyas and Sudras. Amon Vaishyas there are Brahmins, Kshatryasg Vaishyas and Sutras".

"பிராமணர்களுக்குள்ளே பிராமணரும். ஷத்திரியர்களும், வைசியர்களும் சூத்திரர்களும் உளர். ஷத்திரியர்களுக்குள் பிராமணர்களும் ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் உளர். வைசியர்களுக்குள் பிராமணர்களும் ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் உளர்" என்பதே நாவலரின் மேற்படி கூற்றாகும். இவ் வாசகத்தை இந்நூலின் முதலாவது பதிப்பதனை வாசித்த சில அன்பர்கள், நாவலர் பெருமானின் வார்த்தைகளை மேற்கோள் காட்டும்போது சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் முதல் மூன்று வர்க்கங்களில் அடங்காதவர்கள் எனக் கருதப்படும் சூத்திரர்களுக்குள், பிராமணர்களும் சத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர்களும் உளர் என்று ஏன் குறிப்பிடவில்லை என கேள்வி எழுப்பியிருந்தார்கள். அஃது நாவலர் அவர்களைப்பற்றிய நூலின் அச்சுப் பிழையாக இருந்திருக்கலாம் என அடியேன் சமாதானம் கூறியதுண்டு. ஆனால் இப்போ கூடிய ஆராய்வுக்குப் பின் அதற்கு அடியேன் ஒரு விளக்கத்தைக் காட்டக்கூடியதாக உள்ளேன். அது நன்றோ தீதோ நானறியேன். குற்றங்களைந்து நிறைவிருந்தால் ஏற்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்கிறேன்.

## திராவிட நெறியும் ஆரியர் வருகையும்

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் கி. மு. 6000 க்கும் முற்பட்ட கால கட்டத்தில் இந்திய ஆசிய நிலப்பரப்பில் நிலவிய

பழம் பெரும் திராவிட (தமிழ்) நாகரிகம் சிவ வழிபாட்டினைக் கொண்டதாக இருந்தது என்பதற்குச் சான்ருகத் தற்போது பாகிஸ் தான் என இந்தியாவில் இருந்து பிரித்தெடுத்த பகுதியையும் கொண்ட மொகெஞ்சோதார ஹரப்பா நாகரிகங்கள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியைச் சூழ்ந்த நாற்றிசைகளிலும் உள்ள ஆசியாக் கண்டத்தின் பெரும் பகுதியில் மட்டுமல்லாமலும் அவற்றிற்கு அப்பாலும் கடல் கடந்த பிரதேசங்களிலும் அந்நாகரீகத் தொடர்பு நிலைத்திருந்தது. என்பதும் ஆராய்ச்சியாளர் இன்று ஏற்றுக்கொள்ளும் கருத்தாகும்.

## தமிழ் மொழியிலிருந்தே வடமொழி

தூர இடங்களில் இருந்து ஆரியரும் ஆசிய சூழலுக்கு வரும் போது அவர்களும் மேற்படி திராவிட நாகரீகத்திற்கு உரித்தான சிவவழிபாட்டு முறைகளை ஏற்றுக்கொண்டனர். ஆனல் படிப்படியாக ஆரியரும் திராவிடருடன் பல்வேறு அளவில் பல்வேறு பகுதிகளில் கலந்து வாழ்ந்து தமது சமூக சூழல் மாற்றங்களை கொண்டு வந்தது இயல்பானதே. ஆரிய மக்களின் வளர்ச்சி குறைந்துள்ள மொழி முறைகளும் ஏற்கனவே நிலவி வந்த திராவிட மொழியுடன் வெவ்வேறு அளவுகளில் கலந்து வந்த பொழுது வடமொழி எனப்படும் சமஸ்கிருதமும் அவற்றுள் ஒன்ருனது. அம்மொழி இப்போ பேச்சு வழக்கில் இல்லாவிடினும் இந்துசமய விளக்கங்களை கொண்ட பொக்கிஷங்களின் பாதுகாவலனுக இன்றும் இருந்து வருவது குறிப்பிடத் தக்கதே.

ஆதியோடு ஆதியாய எந்தக் கால எல்லைக்குள்ளும் அடக்கமுடியாத நந்திதேவரின் திருக்கைலாய பரம்பரையைச் சார்ந்த சைவத் தமிழ் வேத நெறியில் உருவான சித்தாந்த தத்துவத்திற்கும் சமஸ்கிருத நால்வேதநூல்களுக்கும் அடிப்படை ஒற்றுமை இருப்பதையும் நாம் காணலாம். இந்த ஒற்றுமையை நாவலர் ஏற்ருர். நாவலர் பெருமான் ஒரு வைதிக சைவ சித்தாந்தி என யாழ் பல்கலைக்கழகத்து இந்து நாகரீக தலைவராய் இருந்த ஸ்ரீ கைலாசநாதக் குருக்களாலும உறுதிப்படுத்தப்பட்டது. ஆனல் மேற்படி கல்விமான்களும் சென்ற பரம்பரை அறிஞர்களும் அப்போ ஏற்காத ஒரு விடயத்தை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது "திராவிட மொழியிலிருந்தே சமஸ்கிருத மொழி பிறந்து வளர்ந்துள்ளது". இப்போதைய ஆராய்ச்சி முடிவுக்கு இக்கூற்று உறுதுணையாக

நிற்பதையே இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்; வேத காலங்களுக்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் கூறும் அதே கடவுளின் பெயர்களை பின்னர் வடஎழுத்தில் எழுந்த வேதங்களில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதே. இதைஎமது இளம் ஆராய்ச்சியாளர் கூடுதலாக ஆராய வேண்டும்.

## தொல்காப்பியம் திராவிட நூலா ?

தொல்காப்பிய நூல் உண்மையில் 6000 ஆண்டுகட்கு முற்பட்டதாக இருந்தும் அந்த நூலினுக்கு உள்ளேயே அது சமஸ்கிருத வேத நூலுக்கு பிந்தியது என காட்டக் கூடிய ஆதாரங்களை காட்டலாம். இவை இந்நூலுக்குள் புகுத்தப்பட்ட பிற்சேர்க்கை என தெளிந்கறியலாம். யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் 1993 ம் ஆண்டு முத்தமிழ் விழா மலரில் "தூயதமிழ் வழக்கும் அதன் இன்றைய தேவையும்" என எழுதிய கட்டுரையைப் பார்க்கவும்; இரு பகுதியாக இக்கட்டுரை அறக்கமிழ் ஞானம் 27-3-1993 ம் திகதிய வெளியீட்டிலும் அதன் முந்திய பகுதியிலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் பின்வரும் பகுதியை அப்படியே எமது வாசகர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். "சங்ககால இலக்கியங்களில் ஆரியரின் சமூக நிலை போற்றப்பட்டதுடன் அவர்களின் செல்வாக்கினல் வடசொற்கள் தமிழில் வழங்கத் தொடங்கின. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பாக இந்நிலைமை தமிழில் காணப்பட்டமையால் தொல்காப்பியர் தமிழில் வழங்கும் வடசொற்களுக்கு வருமாறு இலக்கணம் கூறவேண்டியவரானர்

வடசொற் கிளவி வடவெழுத் தொரீ இ.
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே. (தொல். அத். சூத். 5)

வடசொற் தமிழில் புகும்போது தமிழ் மொழியின் ஒலியமைப்புக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து....

மேற்படி சூத்திரம் பின்னர் உட்புகுத்தப்படவில்லை என நாம் ஏற்றுல் கூட தமிழ்மொழி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வழங்கப்பட்டு — வளர்ச்சியடைந்து அதற்கு பின்னர் இலக்கியங்கள் உருப்பெற்று அவ் இலக்கியங்கள் உருப்பெற்ற காலத்தின பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரே தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல் அமைக்க முடியும் — எனவே இந்த தொல்காப்பிய நூல் எழுதும்போது வடசொற்கள் தமிழுக்குள் புதிதாக புகுத்தப்பட்டு வரும் அக்கால நிலையைத்தான் தொல்காப்பியரின் மேற்படி சூத்திரம் எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே தொல்காப்பியர் காலத்தில் தமிழ்மொழி முற்றுகவே ஏற்கனவே வளர்ந்திருந்தது என்பது தெளிவு. எனவே வளர்ந்த மொழிக்குள் வடசொல் புகும் சம்பவங்களுக்கு தொல்காப்பியத்தில் உள்ளதென கூறப்படும் மேற்படி கூற்று சான்ருக அமைகிறது.

எனவே வடமொழியில் இருந்துதான் தமிழ் உருவானது என்ற பழம் பரம்பரை அறிஞர்களின நம்பிக்கை உண்மையல்லது என்பது இதனுல் தெளிவாக விளங்குகிறது.

## பிற் சேர்க்கைகள் ஆதாரமாவதெப்படி ?

ஆகவே சமஸ்கிருதத்து இலக்கணத்தில் இருந்து தமிழ் மொழியோ அதன்
இலக்கணமோ உருவாக்கப்பட்டதென்ற நம்பிக்கைகள் கூட ஆதாரமற்றவைகளே
இந்நிலையில் இக்கூற்றுகளுக்கு தொல்காப்பியத்தில் இருந்து ஆதாரங்கள் சில
பரறிஞர்களால் எடுத்துக்காட்டப்படுவது உண்மையில் காலாகால மரபுவழிப்படி
தொல்காப்பிய இலக்கண நூலுக்கு சேர்த்து சிறப்பிக்கப்பட்ட பிற்சேர்க்கை
ளேயாகும். வடமொழிக்கு கூடிய மகிமை அளிக்கும் நோக்கத்துடன் பல
பிற்சேர்க்கைகள் சேர்க்கப்பட்டன என்பதும் இந்நூலாசிரியர் கருத்தாகும். இக்கால
அறிவு வளர்ச்சியின் பின்னர் இவ்விபர ஆராச்சிகளுக்கு உள்ளான மேற்படி
சூத்திரம் கூட தொல்காப்பிய நூலின் பிற்சேர்க்கையோ அல்லவோ என்பதுவும்
தீவிரமான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது இந்நூலாசிரியர் கருத்
தாகும். இத்துறையில் எமது இளம் பட்டப்படிப்பாளர் கூடிய கவனஞ் செலுத்த
வேண்டும். இது அவசியமாகும். அவர்களை எமது ஆட்சிப்பீடம் ஊக்குவிக்க
வேண்டும். அவர்களை ஊக்குவிக்க எமக்கென ஒரு ஆட்சிப்பீடம் இருப்பது இன்றி
யமையாததே. சமயகுரவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் பற்றி எழுதும் போது
தமிழ் மொழியின் பழமை பற்றிய ஆராய்ச்சிக்கும் எமக்கு சொந்த ஆட்சிபீடம்
பெறுவதற்கும் என்ன தொடர்புண்டு என வாசகர்கள் மனதில் ஐயம் எழுவது
நியாயமானதே. எனவே அடியேன் எமது நாவலர் பெருமான் எமது தமிழ்மொழி
யின் ஆதியோடு ஆதியாய் உள்ள பெருமை பற்றிய கருத்துக்களை காட்டி தமிழின்-
பரப்புப் பற்றியும் அம்மொழியின் ஈடு இணையற்ற தொன்மையைப் பற்றிம் அவர்
கருத்துக்களையும் இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

## நாவலர்பெருமானின் நுண்ணிய நோக்கு

நாவலர் அவர்கள் எமது குழந்தைகளுக்கு என முன்னர் 3ம் பாலபாடம் என
எழுதிய, பின்னர் நான்காம் பாலபாடமாகவும் பதிப்பித்த, நூலில்
தமிழ்மொழி எனும் கட்டுரையில் சமஸ்கிருதத்திற்கு ஒரு விதத்திலும் பிந்திய
தல்லவென்றும் தெளிவாக முடிவு கூறியுள்ளனர் என்பதை நினைவூட்ட விரும்பு
கிறேன்: மற்றும் தமிழ் மொழியின் தொன்மையை ஏற்காதவர்களுக்கு மறுமொழி
யாக ஆண்டவனே தமிழ் மொழியை தந்தபடியால் அது சமஸ்கிருதத்தில் இருந்து
உற்பத்தியாக முடியாது என்ற கருத்தினை தெளிவாக்கியுள்ளார். பார்க்கவும் நாவலர்
பெருமானின் 3ம் பாலபாடம் (பின்னர் 4ம் பாலபாடமாக அச்சிடப்பட்டது) இதை
விட முன்னர் இந்நூலில் மேற்கோள் காட்டப்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி. தனஞ்செயராஜசிங்கம் அவர்கள் நாவலர் கல்வித் தொண்டுகளைப்பற்றி
ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்திலும் (பக்கம் 80 இல்) இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.
யாழ். சைவபரிபாலனசபை நாவலர்நெறியில் பதிப்பித்த தமிழ் 6ஆம் பாலபாடத்தில்
இதுபற்றிக் குறிப்பிடுகையில் 'தமிழ்த் தேசம்' இந்திய உபகண்டத்தின் பெரும்பகுதி
யிலும் — கிழக்கே ஜாவா வரையிலும் மேற்கே மடகஸ்கார் வரையிலும் பரவி இருந்
தது ......... " (பக்கம் 6). மேலும் 'இந்தியாவும் இலங்கையும் ஒரு காலத்தில்
இணைந்திருந்து —. — கடல்கோளால் இப்போ பிரிக்கப்பட்டுள்ளது. எனவே பழந்
தமிழ்ப் பிரதேசத்தின் பரப்பு பிரமாண்டமானதே. நாவலர்பெருமான் இதன்படி

தமிழ் நாகரிகத்தினதும் இதன் இலக்கிய பொக்கிஷங்களின் சிதைவுகள்பற்றிய நிலை களையும் எடுத்துக் காட்டியுள்ளார்:

மேலும் இருபதாம் நூற்றாண்டு முற்பகுதியில் தான் இந்திய உபகண்டத்து மொகெஞ்சோதார ஹரப்பா நாகரீக அகழ்வாராய்ச்சி குறிப்புகள் உலகத்துக்கு கிடைத்தன. அதன்மூலம்தான் பண்டைய திராவிட நாகரிகத் தொன்மையும் அங்கு லிங்க வழிபாடு இருந்தமையும் ஆரியர் வருகையும் - வடமொழி உற்பத்தியும் அதற்கு பின் வந்த சம்பவங்களே எனவும் உலகம்முழுவதும் தெளிவாக ஏற்று வருகின் றது. இதனைத்தான் எமது நாட்டு இளம் துடிப்புள்ள சீர்திருத்தவாதிகள் ஏற்று நிலைநாட்டும் நடவடிக்கைகளை கல்வி ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்கள், அவர்கள் பணி சிறக்க இறைவன் அருள் புரிவாராக!

## சைவசமயத் தொன்மையும் தமிழ்மொழிப் பெருமையும்

சைவ சமயத்தில் தொன்மையையும் அதனுடன் இணைந்த தமிழ் மொழியின் மூதன்மையையும் அவை இரண்டிலும் தெய்வீக பெருமையையும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த நாவலர் பெருமானால் அன்றே தெளிவாக நிலைநாட்டிய பெருமை வியக்கத்தக்கதே. நாவலர் பெருமான் அன்றே உணர்த்தியபடி நாமும் எமது தமிழ் மொழியிலும் அதனோடு இணைந்துள்ள சைவநெறியின் தொன்மையை யும் மேன்மையையும் உணர்ந்து வாழ்வோம்.

சைவமும் தமிழும் ஆதிகாலந் தொட்டு இந்திய பசுபிக் நாடுகளில் பரவியிருந் தது என்பது பற்றி செல்வி ம. செல்லத்துரை அவர்களின் 10-1-92 ம் திகதிய இந்து சாதனம் (புத்தகம் 103 - மலர் 5 - பக்கம் 7 இல்) "தமிழின் ......." என்ற கட்டுரை யினையும். "ஈழ நாதம்" 23 - 04 - 93, பக்கம் நான்கு. 'அவுஸ்திரேலியா ஆதி குடி தமிழரே' எனும் ஆராய்ச்சிக் கட்டுரையும். (ஆதாரம் -'சுபமங்களா' மார்ச் 1963) பார்க்கவும். யாழ். பல்கலைக்கழக பேராசிரியரான கலாநிதி சண்முகதாஸ் அவர்களும் அவரது பாரியார் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் யப்பானிய பேராசிரியர் ஒருவருடன் சேர்ந்து இரு மொழிகளையும் கூடுதலாக ஆராய்ந்து யப்பானிய மொழி இலக்கணமும் தமிழ் மொழி இலக்கணமும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதை நிலைநாட்டும் பணியில் ஆக்கபூர்வமான ஆராய்ச்சியில் பங்கு கொண்டு அண்மையில் சில நூல்கள் யாழ்ப்பாணத்திலும் வெயிட்டுள்ளார்கள். யப்பானிய நாடு வட அமெரிக்க உபகண்டத்திற்கும் வடகிழக்கு ருஷ்ய கண்டத்திற்கும் மிக அண்மையாக உள்ளபடியால் எமது தமிழ் திராவிட இந்து சைவ பரம்பரையின் பரிமாணம் உலகில். ஐரோப்பா கண்டத்தை விட மற்றைய எல்லைப் பகுதி சூழல்களிலும் ஆதிகாலந் தொட்டு பரவியிருந்ததென்ற பெருமையை உணரும்போது சென்ற நூற்றாண்டிலேயே அக்கருத்தினை வித்திட்டு வளர்ப்பதற்கு ஏதுவாக இருந்த நாவலர் பெருமானின் பெருமையினை உணர்ந்து செயலாற்றுவோமாக. எனவே திராவிட சமய சமூக பரம்பரையே எமது அடிப்படைக் கலாசாரமுமாகும். வந்து சேர்ந்த வேதத்தில் இடம் புகுந்த வர்ணாச் சிரம தர்மமும் பின்னர் முக்கியத்துவம் பெற்றது.

நாவலர் காலத்தில் சாதி முறையை அரசாங்கம் ஏற்று வந்த தோடு நில்லாமல் அடிமைகள் இருக்கும் நிலையும் அரச அங்கீகாரம் பெற்று வந்ததே. ஆனல் நாவலர் பெருமான் அவர் காலத்தில் நிலவி வந்த சாதிக் கெடுபிடிக்கு முக்கியத்துவம் கொடுக்காதது என்பதே உண்மை நிலையாகும்.

மேற்படி ஆரியர் வருகைக்கு முன்னர் சாதி சமய வேறுபாடு ஒன்றையும் காணுத ஆதி சிவநெறியைக் கொண்ட திராவிடப் பெருங் குடி மக்கள் ஆரியர் வருகைக்குப் பின்னர் மக்களை அவர்களின் முக்கிய பணிகளின் தன்மையின்படி மூன்ருக வகுத்தனர்.

1) கடவுளை வழிபடும் பூசை பிரார்த்தனை தொழில்களை புரிந்து வருபவர் (பிராமணர்)

2) நாட்டினை பகைவரிடமிருந்தும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு தொல்லைகளிலிருந்தும் காப்பாற்றுபவர் (சத்திரியர்)

இவர்களே பெரும்பாலும் நாட்டினை ஆளுபவர்களாக இருந்தனர் (சத்திரியர்கள் புரோகிதர்களை நியமித்தனர் எனவே பிராமணர்களும் சத்திரியர்களால் நியமிக்கப்பட்டவரே இதே போல் வைஷியரும் அரசனால் நியமிக்கப்பட்டு முக்கியம் பெற்றனர்.)

3) வைசியர் நாட்டின் அபிவிருத்திகளைக் கவனித்து நடத்துபவர். அக்காலத்தில் முக்கியமாக வேளாண்மை பின்னர் வியாபாரமும் தொழிலும் செய்தனர்.

இந்த மூன்று பிரிவுகளிலும் சமூகம் முழுவதும் அடங்கிவிட்டது இம் மூன்று பிரிவினரும் மிக முக்கியத்துவம் பெற்றபடியால் அவர்களிடையே உயர்வு தாழ்வு இருக்கவில்லை. அங்ஙனம் இருக்கவும் முடியாது. சூத்திரர் என்னும் பிரிவினர் எவ்வாறு ஏற்பட்டனர் என்ற கேள்வி எழுகின்றது. சூத்திரர் என்பவர் உண்மையில் பிராமணரின் கடமைகளில் தவறியவர்களையும் சத்திரியர்களின் கடமைகளில் தவறியவர்களையும் வைசியர்களின் உற்பத்தி பற்றி பாடுபடும். கடமைகளில் தவறியவர்களையும் சமூக நலனுக்கு ஒவ்வாதவர்கள் என கருதப்பட்டவர்களே, அவர்கள் ஆசார ஒழுக்கங்களை கைவிட்டவர்கள் என்பவர்கள் ஒழிய அவர்கள் பிறம்பான வர்க்கத்தைச் சேர்ந்

தவர்கள் அல்ல. அதனல் தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பிராமணர்களுக்குள்ளும் சத்திரியர்களுக்குள்ளும் வைசியர்களுக்குள் ளும் சூத்திரரும் ஊளர். மற்றப் பிரிவினரும் உளர். என தெளிவு படுத்தியுள்ளார். இதனல் இவரின் பரந்த சிந்தனை புலப்படுகிறது; நாவலரின் நிலை சரித்திர ரீதியாகவே கணிக்கப்பட வேண்டும்.

ஆகவே நாவலர் பெருமான் மூன்று வர்க்கங்களை சமரீதியாக மேற்படி விபரித்ததில் ஒருவித பிழையும் இல்லையே சரியானதே; சைவப் பெரியாரும் மேற்படி வாசகங்களை மேற்கோள் ஆக தனது நூலில் காட்டியதிலும் ஒருவித பிழையும் இல்லையே சரியானதே. எனவே மேற்படி கூற்று எங்கள் நாவலர் பெருமானின் பரந்த நோக்கையும் விரிந்த சிந்தனையையும் எடுத்துக் காட்டுகின்றனவே ஒழிய அவற்றை ஒருவிதத்திலும் பிற்போக்கானதென கருதுவது முறையாகாது என்பதை இந்நாலின் அன்பார்ந்த வாசகர்களின் கவனத்திற்குக் இவ்விளக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.

## சாதிமுறை உற்பத்தியும் வளர்ச்சியும் குன்றலும்

எமது வேதங்களில் சாதி அமைப்பைப்பற்றிக் கூறுவது "இருக்கு வேதம்" (பார்க்கவும் வேதங்கள்) சிவஸ்ரீ சோமஸ்கந்தராஜக் குருக்கள் B. A. 1992ல் பதிப்பிக்கப் பட்டது: "இருக்கு வேதம் காலத்திற்குக் காலம் சேர்க்கப்பட்டு அதன் பின்னைய அத்தியாயங்கள் காலத்தில் பிந்தி வந்தவை."

இருக்கு வேதத்திலும் முதல் எட்டு அத்தியாயங்களிலும் வர்ணாச்சிரம தர்மத் தைப் பற்றியே ஒரு குறிப்பும் இல்லை. ஆனல் ஒன்பதாம் அத்தியாயத்திற்கு பின்னே வர்ணாச்சிர தர்மத்தைப் பற்றிய விபரம் கூறப்படுகின்றது. ஆகவே பண் டைய திராவிட முறைப்படி சாதிகள் இல்லையென்றும் ஆரியர்களின் வேதநெறியில் கூட வர்ணாச்சிர தர்மம் பிற்சேர்க்கையாக உட்புகுத்தப்பட்டது என்பதும் தெளி வாகும். வேதங்களிலுள்ள மேற்படி பிற்சேர்க்கையிலும் உயர்ச்சி தாழ்ச்சி நிலை அப்போது குறிப்பிடப்படவில்லை. நடத்தை, தொழில், ஆசாரமே சாதியை அந்தக் காலத்திலும் நிர்ணயித்து வந்தது. அக்கால பொருளாதார நிலைபின்படி தந்தையின் தொழிலை மகன் கையாண்ட வழக்கம் தொடரத் தொடர கூடியளவு பிரிவுகள் சாதியென்ற அடிப்படையில் உண்டானது என்று கூறுவதே பொருத்தமானது எனவே கல்விமுறைப்படி தொழில் மாற்றம் ஏற்பட சாதியென்ற நிலை மாறிவரு வது தெளிவாக காணக்கூடியதாக இருக்கிறது.

2) இ, மேலும் ஆராய்ச்சிக்குரிய பகுதி

## நாவலரின் பரந்த உலகளாவிய தத்துவநெறி

தனது கவிதைகளில் நாவலர் நரஸ்துதி பாடாவிட்டாலும் தெய்வமாக மதித்து தனது குருவான சரவணமுத்து புலவரை சிறப்பாகப் போற்றி அவரை
'கருதலர்களளென மருவு கவிஞர்கிடு கிடென எழு கழகப்பிரசங்க சிங்கம்
கருது வேதாந்தசித் தாந்தசம ரசசிந்தை கைவந்த கருணாகரம்!''

என வியந்து வாழ்த்துகிறார்- இவ்விடயமும் எமது சமய ஆராய்ச்சியாளர் கவனத்தை ஈர்க்கவேண்டியதாகும்: ஏனெனில் இது ஆறுமுகநாவலரவர்கள் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே வேதாந்த சித்தாந்த சமரசகொள்கையை தனது உயர்ந்த இலட்சியக் கோட்பாட்டாக கொண்டிருந்தார் என்பதை நிலை நாட்டுகிறது. இது சம்பந்தமாக வேறுபாடான கருத்தை ஏற்போரும் உளர் எனினும எல்லாவிதத்திலும் சைவ சித்தாந்த கொள்கைகளைப் பேணி வளர்த்தாலும் ஆறுமுகநாவலரவர்கள் எப்பொழுதும் வேதாந்தசித்தாந்த சமரசக்கொள்கையை ஏற்று ஒழுகிவந்த பெருமைக்குடையவர் என்பதே சரியான நிலைப்பாடாகும். இதனை யாழ் வளாக இந்து நாகரிகத்துறை பொறுப்பாளராயும் பதில் உபவேந்தராயும் கடமையாற்றிய ஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் போன்றோரே குறிப்பிட்டு உள்ளனர்.

## ஈழத்து சித்தர் பரம்பரை நோக்கும் நாவலர் பெருமானும்

இதே போல் ஈழத்துச் சன்னியாசிபரம்பரையில் கடையிற் சுவாமியாரும் அவரது சிஷ்யனாகிய செல்லப்பாச் சுவாமியாரும் அவரின் சிஷ்யனாகிய யோகசுவாமியாரும் மேற்படி கோட்பாட்டின் உண்மையை ஈழத்தில் ஏற்றுவந்த பெருமைக்குரியவர்கள்.

யோகசுவாமிகள் அவர்கள் ஐம்பது வருடத்திற்கு முன்னரே தான் வெளியிட்ட சிவதொண்டன் பத்திரிகையில் வேதாந்தத்தின் சாரத்தை "சர்வம் பிரம மயம்". என்றும் சைவ சித்தாந்தத்தின் சாரத்தை ''உலகம் எல்லாம் இறைவன் சந்நிதானம்'' என்றும் குறிப்பிட்டு அவை இரண்டினதும் சமத்துவத் தன்மையை தெளிவாக்கி விளக்கந் தந்துள்ளார். இந்தப் பரந்த சிவநெறிக் கொள்கையின் அடிப்படை அத்திவாரமாக கொண்டுதான் இராமகிருஷ்ண பரம கம்சரின் குருசிஷ்ய பரம்பரையில் உதித்த சுவாமி விவேகானந்தரே சர்வமத சமரசக் கோட்பாட்டை உலகத்திற்கு 19ம் நூற்றாண்டு முடிவு காலத்தில் பிரஸ்தாபித்து இந்து சமயத்தின் பெருமையையும் சிவநெறியின் உலகளாவிய தத்துவத்தையும் விளக்கினார். பல ஆண்டுகளுக்கு முன் ஆதிசங்கரரால் துலக்கப்பட்ட தூய நெறியும் அதற்கு முன்னர் - பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆதியோடு ஆதியாய் மிளிர்ந்த ஆதி இந்திய திராவிட சிவநெறிக்கு ஏற்றதாக இருந்து வந்த தத்துவஞானச் சிந்தனையில் தொடர்ந்து நிலவி வருவதும் இக்கோட்பாட்டே என்பது உண்மையாயினும் அது பல நூற்றுக்கணக்கான ஆண்டின் அன்னியர் (குறிப்பாக ஐரோப்பியரின்) ஆதிக்கத் தலையீட்டால் ஏற்பட்ட அரசியல் சமூக குழப்பத்தாலும் அதன் விளைவாக தானாகவே முளைத்த சமய சமூக உட்பூசல்களாலும் இந்திய சமய தத்துவ நிலைப்பாட்டிலிருந்து இடம் பெயர்ந்து மறைபொருளாக மங்கி இருந்து வந்தது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

## பகுதி 6, 7, 8, 9—பக்கம் 40 இன் பின் இணைப்பு

## பகுதி 6 அனுபந்தமும் விநாயகர் வரமும்

1. இந்நூல் பகுதி 5 இன் இறுதியில் "4 முடிவுரை" என தரப்பட்ட பகுதி இந்நூலின் முதல் பதிப்பில் தரப்பட்ட முடிவுரையேயாகும்: இந்நூலின் 6ம் பகுதியாக வரும் இந்த அனுபந்தத்திலேயே முன்னர் இந்நூலின் 4ம் பக்கத்திற் குறிப்பிடப்பட்ட நாவலர் பெருமானின் குருசிஷ்ய பரம்பரை சுருக்கமும் தரப்படுகிறது: அது பின்வருமாறு.

நாவலர் நூற்றாண்டு விழா மலரின் இறுதியில் தரப்பட்ட

1. கூழங்கைத் தம்பிரான் புலவர் பரம்பரை
2. சரவணமுத்துப் புலவர் பரம்பரை
3. ஆறுமுகநாவலர் புலவர் பரம்பரை

தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சுருக்க விபரம்.

கூழங்கைத் தம்பிரான் — ( —1795 )

- நெல்லைநாதமுதலியார்
- நெல்லைநாதமுதலியார் மகன் சேனாதிராய முதலியார் 1750 — 1840
  - சரவணமுத்து புலவர் 1802 — 1845
    - ஆறுமுகநாவலர் 1822 — 1879
- மாதகல் மயில்வாகனம் புலவர்
- வண்ணார்பண்ணை வைத்திலிங்கச் செட்டியார் (சிவன் கோயில் ஸ்தாபித்தவர்)
  - ப. கந்தப்பிள்ளை 1766—1842

குறிப்பு:

இதன்படி நாவலரின் மாணாக்கர் பின்வருமாறு:

1. புன்னாலைக்கட்டுவன் கி. செந்திநாதையர (1848 — 1924)
2. வண்ணை வே. கனகரத்தின உபாத்தியாயர்
3. வேலணை வி. கந்தப்பிள்ளை (1840 — 1914)
4. ஆறுமுகப்பிள்ளை ( ஆறுமுகத் தம்பிரான் )
5. வி. சுப்பிரமணியபிள்ளை
6. இணுவில் நடராசையர் ( 1878 )
7. மா. வைத்திலிங்கப்பிள்ளை ( 1903 )

8. அச்சுவேலி வேன்மயில்வாகனச் செட்டியார்

9. நல்லூர் க. சதாசிவப்பிள்ளை

10. மு. தில்லைநாதப்பிள்ளை ( — 1867 )

11. இணுவில் அம்பிகைபாகர்

12. நல்லூர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை
( பொன்னையாபிள்ளை ) ( 1837 — 1897 )

13. க. பொன்னம்பலபிள்ளை

14. கோப்பாய் சபாபதி நாவலர் ( — 1903 )

15. வண்ணை தி. பொன்னுத்துரை ஐயர்

16. நல்லூர் க. [illegible]பிள்ளை

17. நாச்சிவபத் தம்பிரான் ( — 1883 )

18. [illegible] செட்டியார்

19. இராமநாதபுரம் இராமசுவாமிப் பிள்ளை

20. மட்டுவில் க. வேற்பிள்ளை

21. சுழிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர்

22. நல்லூர் சு. திருஞானசம்பந்தப்பிள்ளை ( — 1901 )

23. சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் ( 1854 — 1922 )

24. நல்லூர் த. கயிலாசபிள்ளை ( — 1939 )

25. வை. விசுவநாதபிள்ளை

26. கொக்குவில் க. சபாரத்தின முதலியார் ( — 1922 )

## ( விநாயகர் வரம் )

கல்லுலையை வில்லாக்கி செந்தமிழை அம்பாக்கி
அல்லல்தீர் மெய் அறிவால் சொல்லெய்தும் அருளாளா
வல்லபிரான் வான் அருளும் விநாயகனே நீவளர்க்கும்
புல்லன் என்றன் நூலிதனை பாரானைப் புரத்திடுவாய்.

நல்லூரான் வெற்றிவேலன்

சைவப்பிரகாச அச்சகம் கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குறிப்பாக கிறிஸ்தவர்களை புறச சமதய
தவர் என்று குறிப்பிட்டது நோக்கற்பாலது. அவர் ஒரு பொழுதும் தாமாக பிற
சமயங்களை எதிர்க்கவில்லை. ஆனல் சைவசமயத்தின் கொள்கைகளையும் கோட்பாடு
களையும் எவராவது தாக்கினல் உடனே பரிகார நடவடிக்கைகளை தவருமல் எடுத்
தார் என்பது அனைவரும அறிந்ததேயாகும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஆசிய கண்ட நிலப்பரப்பிலும் அதன் சூழலி
லும் அனுதியாக வேரூன்றி நின்ற சமயமே சிவநெறி என்னும இந்து அல்லது
சைவசமயமாகும். காலபபோக்கிலே மற்றைய சமயங்கள் உருவாக்கப்பட்டதும்
வந்து சேர்ந்ததும் சரித்திரமாகும. எனவே மற்றைய சமயங்களைப் புறச்சமயங்கள்
எனக் குறிபபிடுவது பொருத்தமானதே. இதில ஒரு தவறுமில்லை, ஆனல் இதற்காக
நாவலா பெருமான மற்றைய சமயங்களை எதிர்த்தார் என மேலும் ஆராயாமல்
கூறுவது பொருததமறறதே. நாவலர் பெருமான மிகுந்த ஆக்ரோஷத்துடன் மத
மாறறம செய்யும் நடவடிக்கைகளையும் அதனை செய்ய முனையும கூட்டத்தின
முறையறற வழிவகைகளை எதிர்த்தார். இதுவே இவருக்கு பின் உலகப்பிரசித்தி
பெறற வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தரின அணுகு முறையா
யிருநதது. அதுவும் பிழையான விளககஙகளைக் கொடுதது தனது சைவசமயத்தை நிந்
திதது (புள்ளி விபரஙகாட்டி இங்கிலாந்துக்கு அறிக்கை சமர்பபிக்கும் நோக்கத்துடன்)
மதமாறற முயன்ற கூட்டததை எதிர்ததார. வெற்றியும கண்டார். இதனலதான்
எமதுநாட்டில் சைவசமயம நிலைததது.

## பிபிலிய நூலையும் மொழிபெயர்த்த பெருமை

இத்தகைய நாவலரே பிபிலிய நூலையும் கிறிஸ்தவருக்கு மொழிபெயர்த்துக்
கொடுதது தம பரநத உள்ளததின பெருமையை நிலைநாட்டியுள்ளார். இத்தன்மை
இநத இருபதாம நூற்றாண்டிலும் சீர்திருததவாதிகளெனத தம்மைக் கூறிக்கொள்பவ
ரின உள்ளங்களையே நெகிழச செய்யும் மேனமை உடையது என்பது மறுக்கமுடி
யாத உணமையெனலாம.

நாவலரின் பரநத நோக்கையும் விரிந்த உள்ளத்தையும் மேலும் எடுத்துக் காட்ட
அன்னார் தீவிரமாக சைவப்பிரசாரத்தொண்டினைச் செய்துவரும் பொழுதே அவர்
ஆஙகிலம படிககும் பாடசாலையின அதிபரான பேர்சிவல் பாதிரியாருக்கு தமிழ் ஆசானு
யிருநததுமட்டுமலலாமல அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க பிபிலிய நூலை
ஆஙகிலத்திலிருநது தமிழுக்கு மொழி பெயர்த்துககொடுததார். அவருடைய
மொழி பெயாப்பின தரம ஒப்பற்றதெனக் கருதப்பட்டு இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ
திருச்சபையினரே கிறிஸ்தவர்கள் பலரால் சமாப்பிக்கப்பட்ட மொழி பெயர்ப்புக்களை
நிராகரித்து சிவப்பிரசார வித்தகரான ஆறுமுக நாவலரின் மொழிபெயர்ப்பையே
தமது உத்தியோக பூர்வமான மொழிபெயர்ப்பாக ஏற்றுக் கொண்ட சம்பவமும் நாவல
ரவர்களின் மாசில்லா மேன்மைக்கும் யாவராலும் என்றும் மதிக்கப்பட்ட
பெருமைக்கும் சான்ருக அமைகிறது.

நாவலர் பெருமான் ஒரு வீரன் அன்பு மயமானவர்) தான் விவிலிய நூலின்
ஆங்கில வடிவத்தை தமிழாக்கம் செய்வதற்கு முன்னர் கிறிஸ்தவ நெறியை படித்

தறிந்து அதனை உணர்ந்து தெளிந்து தன்னை ஆயத்தப்படுத்தி வைத்தார் என
அவரது சரித்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இது அற்புதமாகத் தோன்றினாலும்
உண்மையே. தான் வழிபடும் உண்மைச் சமயமான சைவசமயத்தை பெரிதாக நேசித்
தார். சைவசமய சின்னங்களாகிய விபூதி உருத்திராட்சம் முதலியனவற்றை எப்
போதும் அணிந்து வந்தார். துர்ப்பிரசாரம் செய்யும் பாதிரிமாரைக் கண்டித்த
போது அவர் எப்போதும் கிறீஸ்வ சமயத்தினரே ஏற்று நடக்கும் முறைகளை
எடுத்துக்காட்டி - அதே நடவடிக்கைகளை சைவசமயிகள் செய்யும் போது குற்றம்
கூறுவதை நிரூபித்துக் காட்டினார். இதனால் கிறீஸ்தவ சமயத்தை நிந்திக்க முயற்சி
எடுக்காமலே எமது நாட்டில் சைவசமயத்தை நிந்தித்த மிஷனரிவேலை செய்ய முன்
வந்த பாதிரியார் கூட்டத்தை கைகட்டி வாய் பொத்தச் செய்தார். இந்த விடயத்
தை வெஸ்லியன் கிறீஸ்தவ மிஷனரிமார் தாங்களே இங்கிலாந்துக்கு அனுப்பிய
அறிக்கைகளில் தெளிவாக கூறியதுமட்டுமல்லாமல் அவருடைய பெருமையையும்
எடுத்தியம்பியுள்ளார்கள். சைவசித்தாந்த நெறியின் தூய விற்பன்னராகத் திகழ்ந்த
ஆறுமுகநாவலர் வேதாந்த சித்தாந்த சமரசக் கொள்கையை ஏற்றதோடு நில்லா
மல் அவரது நடத்தை மூலம் சர்வமத சமரசக் கொள்கைகள் உலகலாவிய ரீதியில்
பரவும் வகையில் ஆரம்ப நடவடிக்கைகள் செய்த பெருமைக்கும் உரியவராவர்.

## எமது திருமுறைப் பரம்பரையினதும் உலகளாவிய நோக்கு

ஈழத்துக் கூழங்கைத் தம்பிரான் மரபில் வந்த சேனாதிராஜா முதலியார்
அவர்களும் அவரது சீஷ்யரான சரவணமுத்துப் புலவர் அவர்களும் அவர்க
நேர்வழி மரபில் மிளிர்ந்த ஆறுமுகநாவலர் அவர்களும் ஈழத்தில் சித்தாந்த வாழ்க்கை
முறையை முற்றாக ஏற்று ஒழுகி வந்தனர். அதே நேரத்தில் வேதாந்த சித்தாந்த
சமரச கொள்கையினை ஏற்றவர்களாகவே இருந்தனர். இதுவே ஆதி சனாதன சிவ
நெறியின் விளக்கமான வேதங்களினதும் ஆகமங்களினதும் அடிப்படையுமாகும்.
இரண்டும் ஒரே குடும்ப மரபைச் சேர்ந்த தத்துவங்கள் சித்தாந்தம் வேதாந்தத்தின்
தெளிவு என்பர் அறிஞர். திருமூலரின் திருமந்திரம் இந்த ஒற்றுமை நிலையை உறுதிப்
படுத்துகிறது. சைவ சித்தாந்த திருமுறைகளின் 10ம் பகுதியாகவும் இடம்பெறு
கின்றது. பிற்காலத்தில் உதித்த தாயுமானர் சுவாமிகளும் வேதாந்த சித்தாந்த
நன் நிலை கண்ட வித்தகர் சித்தர் கணமே என்ற முறையில் இதனை மேலும் வலி
யுறுத்தியுள்ளார். திருமூர்த்திகள் மூவரும் பரம்பொருளே யாவர் எனினும்
திருமூர்த்திகளில் எவரை முதல் வணங்குவது என்பதையே சைவ
சமயிகளுக்கும் வைஷ்ணவ சமயிகளுக்கும் உள்ள ஒரே ஒரு சிறிய வித்தியாசமாகும்.
எனவே அது அடிப்படை வித்தியாசமில்லை என்றபடியால் இப்போது வேதாந்தத்
திற்கும் சித்தாந்தத்திற்கும் உள்ள ஒருமைப்பாட்டைப் பற்றி குறிப்பிடப்படும்
வாசகங்கள் வைஷ்ணவ மரபினரையும் சேர்க்கும் தன்மையுடையன என்பது இவ்
வுரையாசிரியரின் தாழ்மையான கருத்தாகும். இது நிற்க வேதாந்த சித்தாந்த
அடிப்படை ஒற்றுமையை நாவலர் பெருமான் ஏற்றிருந்தார். இவர் இலங்கைக்கும்

இந்தியாவுக்கும் இடையில் பலமுறை பிரசாரம் செய்து 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே ஆதி சனாதன தர்ம மார்க்கத்தில் எழுந்த நெறிகளின் ஒற்றுமைத் தன்மையின் அம்சமாக வேதாந்த சித்தாந்த சமரச நெறியை திரும்பவும் இந்திய உபகண்டத்தில் வளர ஏதுவானார். நாவலர் பெருமானின் இப் பங்களிப்பு எங்களுக்கும் பெருமையே. இதனை அடிப்படை ஆரம்பமாக கொண்டே உலகளாவிய சர்வமத சமரசக் கோட்பாடு இந்தியாவிலிருந்து 19ம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் சுவாமி விவேகானந்தர் அவர்களால் எடுத்துச்செல்லப்பட்டது இப்போ சரித்திரமாய் விட்டது:

பல்கலைக்கழக ஆராய்ச்சி மட்டத்திலும் இதனை எமது இளம் சந்ததியினர் ஆராய வேண்டும் இது முக்கியமாகும். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாய இன்றைய காலகட்டத்தில் எமது சமயமும் சமுதாயமும் பல கோணங்களிலிருந்து அல்லல் படுத்தப்படும் நிலையிலிருந்து விடுபட்டு எமக்கு அரசியல் பொருளாதார சமய கலாச்சார மறுமலர்ச்சி வெகு விரைவாக வந்து கொண்டிருக்கும் இந்த சகாப்தத்தில் மேற்படி ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளும் எமக்குப் பொருத்தமாகவும் அனுகூலமாகவும் வந்து அமையும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. உலகில் அனைவரும் இறுதியில் வீடுபேறு அடைவர் என்பதே சைவ சமயக் கோட்பாடு. ஒவ்வொருவரும் தமது கர்மவினை வளர்ச்சி நிலையின் பக்குவத்திற்கேற்ப கடவுளால் நடத்தப்பட்டு வருவதால் பிறசமயத்தவரும் கடவுளையே அடைவர் ஆதலால் தாமதமேற்படலாம் இந்நிலையை கோட்பாடாகக் கொண்ட நாவலர் பெருமான் எங்ஙனம் சமய சமரச சிந்தனையை வளர்க்காமல் இருக்க முடியும்.

இங்ஙனம் "மறைந்து இருந்த பரந்த அடிப்படை ஒற்றுமைக் கோட்பாட்டை திரும்பவும் வெளிக்கொணர்ந்து, இந்துசமயத் துறவியான சுவாமி விவேகானந்தர் அர்களே சிக்காகோவில் நடந்த சர்வமதமகாநாட்டில் இந்துசமய மேன்மையையும் பெருமையையும் 19ம் நூற்றாண்டின் முடிவில் உலகறியச் செய்தார்" என நாம பெருமைபடும்இந் நேரத்தில்——எப்பொழுதாவது எம்முள் எவராவது எங்கள் ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இந்த உலகளாவிய கொள்கையின் அடிப்படைத் தததுவத்தை 19ம் நூற்றாண்டு முற்பகுதியிலேயே இந்திய உபகண்டத்திற்கு தனது சமயப் பிரசார முயற்சியால் எடுத்துச் சென்றபடியால் தான் அது பல கோணங்களிலும் பரிணமிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து உலகத்திற்கு பிரதிபிம்பப்பட்டதென்ற எண்ணம் எழவில்லையா?

எனது தாழ்மையான கருத்தின் படி இந்த விடயம் எங்கள் வருங்கால சமயத்துறை ஆராய்ச்சியாளர்கள் தீவிரமாக கவனிக்க வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன்.

எப்படியாயினும் நாம ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை யாதெனில் வேதாந்த சித்தாந்த சமரச சிந்தனை ஈழ மண்ணில 19ம நூற்றாண்டின் ஆரம்பத்தில் அல்லது அதற்கு முன்னரே நிலவி வந்து, அதை மறந்துவிட்ட தாயகமாகிய இந்திய உபகண்டத்திற்குத் திரும்பவும் அழைத்துச் செல்லப்பட்டதனால் தான் அந் நூற்றாண்டின் முடிவில் (ஆறுமுக நாவலரவர்கள செய்த பரந்த சமயப்பிசாரத்தின் இடைவிளைவாக) முழுதாகப் பரிணமித்த சர்வ உலகம் போற்றும் சர்வமத சமரசக் கொள்கையாக மிளிர்ந்துள்ளது என்று கூறிப்பெருமையடையும் போதுகூட, சர்வதேச அரங்கிலும் எமது ஆறுமுகநாவலர் சைவ உலகத்துக்கும் ஏன் உலகம முழுவதற்கும் செய்த சேவையையும நாம் காணக்கூடியதாக இருக்கின்றதே என எண்ணத் தோன்றுகிறது.

மூன்றும் பகுதி

## நாவலர் பெருமானின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகள்

இவரது பாக்களின் சிறப்பையும் அவை மிளிரும் பரிமாணத்தையும் நேரில் படித்து பயனடையும்படி அவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இதன் பின் சேர்க்கப்பட்டுள்ளன. நாவலரின் பல நூல்கள் அழிந்தும் அழிக்கப்பட்டும் வருவது எமது தவக்குறைவே. இப்போ நாவலர் பிரபந்தத் திரட்டிலிருந்தும் மற்றும் ஆராய்ச்சியாளர் நூல்களிலிருந்தும் இந்துசாதனம் போன்ற பத்திரிகைகளிலிருந்தும் மற்றும் கட்டுரைகள் துண்டுபபிரசுரங்களிலிருந்தும் நாவலரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் எடுக்கக் கூடியதாக இருக்கின்றதயாலும் நாவலர் பெருமானைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய வேறு பழைய புதிய நூல்கள் இன்னும் பல இருப்பினும் அவற்றை எல்லாரும் பார்த்துப் படிக்கக் கூடிய முறையில் இல்லாமை எமக்குப் பெருங்குறையாக இருக்கிறது. உதாரணமாக பலரின் வேண்டுகோளுக்கு இணங்க சைவ பரிபாலன சபையாரின் சைவப்பிரகாச அச்சகத்தில் நாவலர் பெருமான் எழுதித் தந்த நித்திய கருமவிதி கைநூல மறுபிரசுரம் செய்ய இப்போ அடியேன் முயற்சி செய்து வரும் சந்தர்ப்பத்தில் அதன் பிரதி கிடைக்காமலிருக்கின்றது. இதுவே தற்போது 1993ம் ஆண்டில் எமக்குள்ள நிலை. இச்சூழ்நிலையில் எமது அரசாங்கமும் உள்ளூராட்சி மன்றங்களும் உட்பட மற்றைய பொது ஸ்தாபனங்களும் சபைகளும் அச்சகத்தாரும் தனிப்பட்டோரும் மேற்படி நூல்களையும் ஆதாரங்களையும் அனைவரும் இலகுவாகப் பெற்று பயனடைய உடனடியாக வழிவகைகள் செய்வது இன்றியமையாததொன்ருகும். எனவே நாவலரின் சில கவிதைகளின் சேர்க்கையை எனது வாசகர்களுக்கு சமர்ப்பிக்கும் இச்சந்தர்ப்பத்திலும் அதுவும் 1983-ல் இராணுவ நடவடிக்கையினுல் எமது அருமருந்தன்ன 80,000 நூல்களைக் கொண்ட பொது நூலகமும் எரித்தழிக்கப்பட்ட நிலையில் எமது மக்களுக்கும் குறிப்பாக எமது இளஞ் சந்ததியினருக்கு வேண்டிய நூல்களையும் மற்றும் வசதிகளையும் பெற தகுந்த பிரதி ஒழுங்குகள் செய்வது உடன் தேவையாக இருக்கின்றது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டு விட்டு நாவலரின் சில கவிதைகளையும் இதன் பின் தொகுத்து தரப்படுகிறது:

நாவலர் கவிதைகளிற சில

1) ஆசுகவி — விநாயக வணக்கம்

சீர்பூத்த கருவிநாலுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்களோங்க
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது ஆங்கப்
பிறைபூத்த சடை மௌலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ருேதும்
மதம்பூத்த விநாயகன்ருள் வணங்கி வாழ்வோம்.

2) பெரிய புராணத்து வசனத்து விநாயக வணக்கம்

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும்பொருளைச் சிவனார் தந்த
பேர்பூத்த திருமலசின் மயவடிவை
யானந்தப் பெருக்கை யென்றும்
கார்பூத்த திருநெடுமா லயன்மூதற் புங்
கவர்வணங்குங் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்.

நல்லூர் கைலாச பிள்ளையார்மீது மங்கள விருத்தம்

சீர்கொண்ட பரமவா னந்தசிற் சுகசொரூப
செகதீச திருமங் களம்
தெய்வசர வணபவசண் முகவற்கு முன்வந்த
திகழீச திருமங் களம்
பேர்கொண்ட சதுர்மறையின் முதலிலகு பிரணவப்
பிரகாச திருமங் களம்
பிறைநுதலொ டயில்விழிகொள் வல்லவையெனு மரிவையிற்
பெருநேச திருமங் களம்
ஊர் கொண்ட பரிதிமணி யெனவிலகு மூதாமதி
லொளிர்தேச திருமங் களம்
ஒருவெண்ணெய் நல்லையமர் மெய்கண்ட தேசிகற்
குபதேச திருமங் களம்
கார்கொண்ட கரடதட கயமுகவ வங்குசக்
கரராச திருமங் களம்
கருணேச நல்லையங் கைலாச புரிவாச
கவினேறு கணராசனே.

குறிப்பு;- நல்லூர் கைலாசபிள்ளையார் அவரது குல தெய்வம்; அதனை நாவலர் அவர்களே சிதைந்த நிலையிலிருந்ததை கோவிலாக்கி அவரது குடும்பக் காணிகள் கொடுத்து குடும்பத்தினரால் புனருத்தாரணஞ் செய்வித்து பரவசமடைந்தார்;

நல்லைக் கந்தசுவாமிமீது வாழி விருத்தம்

அருணவிக சிதகமல மலரைநிகர் தருவதன
மாறு மறுதினமும் வாழி
அமரர்தொழு கனகசபை நடனமிடு பரமசிவ
னருண்முருகர் சரணம் வாழி
கருணைமழை பொழிபனிரு நயனமதி னெடுவலிய
கவினுலவு தோள்கள் வாழி
கனகிரியை யிருபிளவு படவுருவு நெடியவயில்
கரதலத் தினிது வாழி



8

வருணமர கதவழுந திகழவரு மவுணனெனு
    மயிலிறெடு சேவல் வாழி
வனசரர்த மரசனுத வியகுறமி னெடுகடவுண்
    மயிலிவர்க டினமும் வாழி
தருணமிது வெனவமரர் பணிநல்லை யமர்கந்தர்
    தமதடியர் நிதமும் வாழி
சகசநிரு மலபரம சுகிர்தபரி பூரண
    சடாட்சரம் வாழி வாழி

குறிப்பு :- நல்லூர் கோயில் நாவலர் பெருமானுடைய சொந்த கிராமத்திலுள்ளபடியால் அன்னார் அதன் மேன்மையிலும் திருத்தத்திலும் அக்கறை காட்டிவந்தார் கோயிலருகில் காணியும் வாங்கி அதில் அடியார்களுக்கு மடமும் நிறுவப்பெற்றது. அக்காணியே அவரது நூற்றாண்டு விழா நடாத்திய நாவலர் சபைக்கு 99 வருடக் குத்தகையாகக் கொடுக்கப்பட்டு அதில் அன்னாரது உருவச்சிலை இலங்கை முழுதும் ஊர்வலமாக பவனிவந்து அக்காணியில் கட்டிய அலங்கார மண்டபத்தில் வைக்கப் பட்டிருந்தது. இப்போது அச்சிலை ஓரிரவு அச்சபையாரால் சடுதியாக அகற்றப்பட்டு அவரது பிறந்த காணியில் இலங்கை அரசாங்க கலாச்சார அமைச்சால் கட்டப் பட்ட நாவலர் மணிமண்டபத்தில் வாசல் அறை இடது மூலையில் வேறு ஒழுங்குகள் செய்யப்படுவதை எதிர்பார்த்து பாதுகாக்கப்பட்டுள்ளதை வாசகர்களுக்கு அறியத்தருகிறேன். நாவலர் தொண்டர்கள் நாவலருக்கு செய்துவரும் தொண்டு மென்மேலும் வளரவேண்டும் என அடியேனும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அடுத்து நாவலர் தனது தந்தையாராகிய சிவபெருமானுடன் நேரடியாகப் பேசிக் கொள்ளும் கவிதையொன்றைப் பார்ப்போம்:

**உடையார் துதி**

மணிகொண்ட கடல்புடைகொ ளின்நாட்டி லுன்சமய
    வர்தன மிலாமை நோக்கி
மகிமைபெறு நின்புகழ் விளக்குவான் கருதியிம்
    மைப்பொருட் பேறொழித்தே
கணிகொண்ட வித்தியா சாலைதா பித்திவ்வூர்க்
    கயவர்செயு மிடர்கள் கண்டுங்
கல்லூரி யதைநடாத் தப்பொருட் டுணைசெயக்
    கருதுவோ ரின்மை கண்டும்
அணிகொண்ட சாலைய தொழிப்பனெஃ துணையிகழு
    மந்நிய மதத்தர் சாலை
யாமென நினைத்தனெஞ் சற்பகற் றுயருற
    லறிந்துமொரு சிறிது மருளாது
திணிகொண்ட நெஞ்சவினி நின்முன்யா னுயிர்விடுத
    றின்னை நீ யறியா ததோ
சிறியேன் தன்பிலர்ச் சனைகொளழு கியதிருச்
    சிற்றம் பலத்தெந் தையே.

குறிப்பு:- மேற்படி பாடல் நாவலர் பெருமான் தான் ஸ்தாபித்த நாவலர்
வித்தியாசாலையை தொடர்ந்து நடத்த இயலாமையினாலே சிவபெருமானுக்கு உதவி
செய்யுமாறு விண்ணப்பித்து பாடினார். - உதவி செய்யாவிட்டால் அவ்விடத்திலே
தானே - பழிகிடந்து உயிர் நீப்பதாக சபதஞ் செய்தார். என்ன விந்தை. கொழும்பில்
இருந்து வந்த கொடை வள்ளலும் சேர் பொன் இராமநாதனின் மாமனாருமாகிய
நன்னித்தம்பி முதலியார் அவர்கள் அப்போ அவருக்கு உடன் தேவையான ரூபாய்
நானூறை இவை ஒன்றும் அறியாமலே வந்து உவந்தளித்தார் - இது நாவலர்
சரித்திரத்தில் நாயனமாருக்கு படிக்காசு கடவுள் கொடுத்தது போன்ற நிலையில்
கடவுள் அருளால் நடந்த அற்புதமென்றே நாங்கள் கொள்ளக் கூடியதாக இருக்
கின்றது.

இதைவிட நாவலர் அவர்கள் அராலி பதியிலுள்ள சித்திவிநாயகர் மீதும்
அப்பதி விஸ்வநாத சுவாமி விசாலாட்சி அம்மை முதலியோர் மீதும் அரிமழம்
சுந்தரேசர் - மீனாட்சி மீதும இன்னும் பல தலங்கள் பற்றியும கவிதைகளும் கீர்த்
தனங்களும் இயற்றியுள்ளார். திருமுறைகள் இடம் பெற்ற திருக்கேதீஸ்வரத்தையும
திருக்கோணேஸ்வரத்தையும் புனருத்தாரணம் செய்ய அரும்பாடு பட்ட நாவலர்
பெருமான் அருணகிரிநாதர் சிறப்பித்துப் பாடிய கதிர்காமக் கந்தன் மீதும் பாடி
யுள்ளார். அவர் கீர்த்தனங்கள் பல இராகம் தாளத்துடன் அவரால் அமைக்கப்
பட்டு நல்கியது குறிப்பிடத்தக்கதே
கதிர்காமக் கந்தன் மீது கனிந்த உள்ளத்தோடு பாடிய கீர்த்தனங்களில் சில
கீழே தரப்பட்டுள்ளது. (பார்க்கவும் நாவலர் 150 வது ஜெயந்தி மலர்)

பல்லவி

இத்தனை கொடு வேதனைப்படல் கண்டு உமக்கு
இன்னும் இரக்கம் இல்லையா

சரணம்

எள்ளின் நெய்போலெங்கும் நிறைவீரே உமக்கு
என் துயர் தெரியாதோ அறைவீர
தெள்ளுதமிழில் வைதார் தமக்கும் அருள்வீர் என்று
நீதில் அருணகிரிதேவர் சொல் நம்பி வந்தேன் (இத்)

மற்றொரு பல்லவி வருமாறு:-
என்மேல் இரக்கம் இல்லையா சாமி பகல் வணக்குக்கங்கை
இரங்காதிருந்தால் என் சொல்லும் பூமி

இவருடைய தனிப்பாடல்களில் புலோலிநகர் ஸ்ரீ பசுபதீசரப் பெருமானின் மீது
பாடிய பத்து பாடல்களைக் கொண்ட திருவூஞ்சலும், செட்டிமாரின் வேண்டுகோளுக்
இணங்கி நல்லை வேறு நீண்ட ஸ்தலப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன
இவற்றைவிட ஆறுமுகநாவலரவர்கள் “ சனி நீராடு” என்னும் முதுமொழியைக்
குறித்து சொல்லிய ஒட்டுக் கவியும் மற்றைய கவிதைகளிலும் வித்தியாசமான
தன்மையுடையது. நோக்கற்பாலது. இச்சிறு தொகுப்பில் இதுவும் சேர்க்கப்
படுகிறது.

சிட்டுக்கவி

மக்கள் குரு தத்தர்நிட தத்தர்பிற மன்னர் தொழ
வளமிகு தொன் மதுரை நீங்கி
மத்தகய மொத்ததிறல் பெற்றிடுபுவி சக்ர
வர்த்திசிங் காரியன் முதல்
மன்னரர சாளுமிட மென்னவள யாழ்ப்பாண
மருவுநல்லாபுரி யினன்
மயில்வாகனச்சுப்ர மணியகலா மியின்திரு
மலரடி துதிக்கும் அடிமை
இக்கனைத் தும்புகழும் முத்தம் மிகுத்திடுஞ்
செந்தமிழ் கலைஞர் மகன்
சீர்மருவு கந்தனருள் மைந்தனு மாறுமுக
தரனெழு துங்கா கிதம்
செப்புதய தாரகைப் பத்திரமர் சிறப்பதித்
திட்டுப்பிர சித்தி செய்யும்
இகழ்முகா மைக்கார ரெதிர்கொண்டு துயர்விண்டு
சித்தமகிழ் கொண்டு காண்க
தக்கசனி நீரா டெனுமவ்வை யார்மொழி
தனக்குரை தனைப் பகரிடிற்
சனிவார மதிலெண்ணெ யிட்டுவெந் நீரினிற்
தலைமுழுக வென்ப தாகும்
சத்திய விசித்திரகவி ஞர்குரு சிதம்பரபல்ய
சற்குண மகத்துவ மிகும்
தணிகைவளர் கந்தப்ப தேசிக னளித்திடுஞ்
சரவணப் பெருமா னெனும்
மிக்கபுல வனுமிங் ஙனமுரைவ ருத்தனன்
மிகுசோ திடங்க லாலும்
வித்தக வறப்பளிச் சரசதக முதலான
வேறுபல நூல்களாலும்
மேலான பொருளிதென வேயுணர்க வேறுசில
வீணர் பொருள் வேறு பகர்வார்
மெய்மையைப் பற்றிவன் ஞவர்சொன்மூன் ஞன்குறள்
விளங்கிலார் போல மன்றே.

வெளியில் இலக்கிய நோக்கத்துடன் எழுதிய கவியில் கூட நாவலர் பெருமான் தொடர்ந்து தெய்வீக சிந்தனையுடனும் குரு விசுவாசத்துடனும் தனது பாடல்களை வகுத்தது நோக்கற்பாலது. எனவே சமய சமூக அரசியல் ஞானியான நாவலர் ஒரு பெரும் மதிநுட்பமிக்க செந்தமிழ் புலவர் என்பதையும் நாம் மறக்கமுடியாததாகும்

உ

நாவலர் பெருமான் தனது குருநாதரைப் பற்றியும் செந்தமிழ்க் கவிதை புனைந்துள்ளார். இது யாழ்ப்பாணத்துச் செந்தமிழ் புலமையிற் சிறந்த மகாவித்வானாகிய நல்லூர் மனப்புலி முதலியார் குமாரர் சரவணமுத்து முதலியார் பேரில் பாடப்பட்ட சரமகவியேயாகும் : இவர் மாணாக்கராகிய நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் சொல்லப்பட்டது என குறிக்கப்பட்டுள்ள இக்கவி பின்வருமாறு:-

**முப்பத்தாறு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்**

சீரேறு சகவருட மாயிரத் தெழுநூறு சேருமறு பத்தே ழினிற்
நிலகுவிசு வாவசெனும் வருடமதின் மரமகதி திகழு நாலாந் தேதியிற்
றிருவளரபொன் வாரமக நாளபர பக்கநிகழ் திருதியை யெனுந் திதியினிற்
செறியுமா யுட்கம்ப யோகவணி கலகரண தினதும்ப லக்கினத்தே
தென்னிலங் காபுரியி னுக்குள்வளர் யாழ்ப்பாண தேசமுழு துஞ்சி றக்கத்
தெய்வசர வணபவசண் முககுமர குருபரன் றிகழ்நல்லை யமர் சிரேஷ்டன்;
பேரேறு மிப்பூ தலஞ்சிறி தெனும்படி பெரும்புகழ் படைத்த மகிபன்
பெருமை பொறை யறிவொடருண் முதலியநல் குணமொடு பிறந்துடன்
வளர்ந்த நிபுணன்
பீடேறு மாணவக ரகவிரு டோத்திப் பிறங்கு கற்பூர தீபம்
பிரதாப மதுமாறை நகர்மணப் புலிமுதலி பெறவரு சபாரஞ்சிதம்
பேசருமி லக்கணவி லக்கியக் கடலுண்டு பெரிதுதேக் கெறியு மேகம்
பேதையே னெஞ்சக மெனுஞ்சிலையின் மீதுமலர் பெருமிதவி கசித கமலம்
காரேறு மிவையவர்கள் பதியனைய வுயர்பிரபு கட்குநவ ரத்ந மகுடம்
கடவுளர்த மமுதநிக ரதிமதுர முத்தமிழ்க் கவிமதம் பொழி குஞ்சரம்
காதன்மிக கலவாண ரிதயமண் டபமீது கவினர சிருக்கு நிதியம்
கனவெழில்கொண் மதனுமநி சயமுறு சவுந்தரிய கனகவிக் கிரக சொரூபம்
கருதலர்க ளெனமருவு கவிஞர்கிடு கிடெனவெமு கழகப்ர சங்க சிங்கம்
கருதுவே தாந்தசித் தாந்தசம ரசசிந்தை கைவந்த கருணாகரம்.
சாரேறு பசுபாச பதிலக்ஷ ணப்ரபல சைவாக மப்பொக் கிஷம்
தத்யப்ர காசர வணமுத்து முதலியாந் தன்னிகரி லாத குரவன்
சாசுவத நிர்மல வியோமவிசு வாதீத சத்திய நிராலம் பமாய்ச்
சர்வபரி பூரணவ கண்டதத் துவமாய்ச் சராசர வணுக் கடந்த
சச்சிதா னந்தபர நிஷ்களா னந்தமாய்ச் சதுமறையின் முடிவி னிலகுந்
தற்பரசு காரம்ப சுத்தசிவ னுருபய சரணமலர் மேவி னனே.

நாவலர் அவர்கள் நரஸ்துதி ஒருபோதும் பாடுவதில்லை. இது நாவலர் அவர்களின் குருவை தெய்வமாக மதித்து ஒழுகிவந்த குரு பக்தியின் உன்னத எடுத்துக்காட்டாகவே மிளிர்கின்றது. இதேபோல் அன்னார் அவர்களுக்கு அளப்பரிய சேவை செய்திருந்த சீஷனாகிய வி. சுப்பிரமணியபிள்ளை பேரில் இருபது பாக்களுடைய இரங்கற்பாக்களை பாடியுள்ளார் இது இவரது மனிதநேயத்தின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறது. இத்துடன் நில்லாமல் இளமையில் மாண்டதனது சிஷ்யனின் குடும்பத்துக்கு உதவி செய்ய முன்வந்து அவரது புத்திரனுக்கு கல்வி கற்பிக்க ஒழுங்குகள் யாவும் செய்து கொடுத்தார்;

நாவலர் பெருமான் தனது இதயபூர்வமான மாணவராய வி. சுப்பிரமணியபிள்ளையைப் பற்றிய இருபது பாடல்களை பாடியுள்ளார் என அவர் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றின் தன்மையை வெளிக்காட்டுவதற்காக பின்வரும் மூன்று பாடல்கள் மட்டும் தரப்படுகின்றன.

1) இருநிலத்தோர் கோபியென எடுத்துரைக்கும் என்சினத்துக்கு
ஒருபொழுதும் இலக்காது ஒழுகி எனது உளம் முழுதும்
உருகிய காதலிற் கொள்ளை கொண்ட உறவினன்சீர்
பெருகிய சுப்பிரமணியப் பெருந்தகையோய் நீயன்றே?

2) பிறரிடத்துச் செல்லா எம்பெருமானார் தமியேன்பாட்டு
உறவின் எழுந்தருளால் கண்டோர் உளைந்து புறம்பழிப்பரென
அறநினைந்து புலம்பிய மெய்யன்ப இனிப் பிழைத்திடின் அப்
புறவுரை கேட்டஞ்து என்றே புவியின விட்டேகினையே.

3) உன்பாதம் மிகவருந்த ஒருசிறியேன் மனைக்கணியான்
இன்பார இழுபொழுதும் எழுந்தருள்வ தென்னை எனத்
துன்பார நெருநரின் நீ சொற்றென்னை இன்றென்மீதின்
அன்பாலோ யான்வருந்துவது அரனுலகம் அடைந்தனையே.

குறிப்பு:- மேலே கண்ட மூன்று பாடல்களும் ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு என்ற சுவடியின் ஈற்றில் "தனிப்பாமாலை" என்ற பகுதியில் அச்சிடப்பட்டுள்ளது என ஆதாரம் காட்டி நாவலர் பெருமான் 150-வது ஜயந்திவிழா மலரில் தமிழ் பெரும் புலவர் டாக்டர் இ. மு. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் தனது கட்டுரையில் தந்து விட்டு அத்துடன் அவர் அப்பாட்டுக்களைப் பற்றி அபிப்பிராயம் ஒன்று வெளியிட்டிருந்தார். அது பின்வருமாறு.

"இவை சிறப்பான நடை இல்லாமையால் நாவலர் பாடியன ஆகா என அறிந்தவர் கூறுவர்" எப்படியாயினும் நாவலர் சரித்திரம் முழுமையில் இந்த விடயமும் இடம்பெற வேண்டும் என விரும்பி அறிந்த விபரமும் தந்துள்ளேன்; இதுவும் இந்நூலின் அடுத்த பகுதியில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவரின் கருத்தினோடு ஒத்துப்பார்த்து எமது நாவலரின் பிற்காலத்தில் அவர்தனை சூழ்ந்திருந்த நிலையை எமது வாசகர்களும் அறிந்து உணர்வார்களாக.

நாவலரின் கவிதைகளைப் பற்றிய இப்பகுதியில் அன்னாரது சிஷ்யராக வாய்ந்த ஸ்ரீ சுப்பிரமணியப்பிள்ளை என்பவரைப்பற்றி - நாவலர் பாடிய கவிதையைப்பற்றியும் அதன் சூழலைப்பற்றி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் எங்கள் சைவபரிபாலன சபையின் ஆரம்ப பரீட்சைக் காரியதரிசியாயிருந்த திருவாளர் சி. சிவரட்ணம் மாஷ்டர் "நாவலரின் சமயப்பணி" என்ற தலைப்பில் 19 - 11 - 62 இல் யாழ் சைவப்பிரகாச அச்சகத்தில் வெளியிட்ட நூலில் அளித்த அணிந்துரையில் அழகாக விபரித்துள்ளார், இது மிகவும் எதிர்பாராத அரிய விபரங்களைக் கொண்டிருந்த படியால் இதனையும் எனது வாசகர்கள் அறிய வேண்டும் என்ற ஆர்வத்தினால் அவரது அணிந்துரையின் உரிய பகுதியையும் இந்நூலின் நான்காம் பகுதியாக்கி இத்துடன் சேர்க்கிறேன்:-

பகுதி 4

## பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் அணிந்துரை

"நாவலர் அவர்கள் ஒரு வளரும் பயிர் என்பதை முளையிலே தெரிந்தவர் பார்சிவல் பாதிரியார். நாவலர், புலவர், பண்டிதர், வித்துவான், மகாவித்துவான் என்கின்ற வரிசைக்கு அப்பாற்பட்டவர். நீதி என்கின்ற உந்நத உலகில தன் வாழ்க்கையை இட்டுக்கொண்டவர் நாவலர். அவருக்கு நிதி பொருளன்று. நீதி பொருள். நாவலர் உயர்ந்த சாதிமான். இந்த உண்மை நிலையை நன்கு உணர்ந்தவர் குறிப்பிட்ட பாதிரியார்.

## நாவலரும் பார்சிவல் பாதிரியாரும்

நாவலரும் பாதிரியாரும் பன்னிரண்டு வருடத்துக்குமேல் இருமைபின் ஒருமையுற்று வாழ்ந்து வந்தார்கள். இருவரும் புறத்தால் பிரியும் ஒரு நாள் வந்தது. தமிமிடம் இங்கிலீசு படிக்க வந்த நாவலமை மம (எனது) ஒரு எவரும் அகத்திலும் மெல்ல மெல்ல புறததிலும் வணக்க உரை வழங்கிக் கொண்டே "தலைக்கு மேலே கைகாட்டுந் * தமிழருககாக கதறிக் கதறி மணடை வெடித்துத் தாங்கள

(* எஜமான் சமயற் பணியாளனைப் பார்த்து இதோ விருந்தாய் வந்திருக்கும ஐயாவுக்கும வடை பாயாசத்துடன நலவிருந்தளிகக வேண்டுமென்று வாயாற கட்டளையிடுகின்றார். அதேசமயம் ஒரு கை தலையைத தீணடுவது போல் மேலே உயர்ந்து மறுபபுக்குறி செய்கின்றது. விருந்து வந்த ஐயா நாள முழுதும் கொட்டாவியுடன் போர் புரிந்து தொலைய வேண்டியவரே. - இநத உபசாரததிற்குத் "தலைக்கு மேல கைகாட்டுதல்" என்று பெயர்.)

சாவீர்கள்" "என்று ஒரு சாபமொழியும வழங்கினர் பார்சிவல் பாதிரியார். நாவலர் சைவம் வளர்க்கப் புறபபட்டார். பாதிரியாருககு பிரிவாற்றுமை கைமிக்கது. தங்கீழ்க் கிறீஸ்தவர்களைப் பஞ்சாட்சரக கிறீஸதவர்கள் எனறு சொல்லிக் கொண்டே பாதிரி உத்தியோகத்தைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு, சென்னை நோக்கித் தமிழ் வளர்க்கப் புறப்பட்டுவிட்டார் பாதிரியார். இவரைச் சாக்கிய நாயனுரோடொப்பிட்டுள்ளார் ஆறுமுகநாவலர்."

## நாவலரும் அவரின் சிஷ்ய பரம்பரையினர் நிலை

"நாவலர் அவர்களின் உண்மை நிலையை நன்கு உணர்நத ஒரே ஒருவர் பாதிரியார். நாவலரின் மருகரும் மாணுக்கரும் வித்துவ சிரோன்மணியும் இலக்கிய இரசிக சிரோரத்தினமுமான ந. ச. பொன்னம்பலப் பிள்ளையும் நாவலர் அவர்களை உணர்ந்தவர். ஆனுல் நாவலர் அவர்களிடம் தமக்கு எவ்வகையிலும் எட்டாத வெகு தொலைவில் உள்ளதென்பதையும் தெளிவாக அறிந்திருந்தார். சதாசிவம் பிள்ளை முதலிய மாணவரும் நாவலர் பரம்பரையினரும், நாவலர் அவர்களை ஐந்தாங் குரவராக்கிக் கொண்டு நாவலராதீனத் தம்பிரான்களாய் இருமாந்திருக்கலாம் என்று

எண்ணிவிட்டார்கள். அவர்கள் எண்ணம் தலைக்கு மேல் கைகாட்டுவராயிருப்பதைத் தமது ஐம்பதாம் வயசில் 1872ல் நாவலர் அவர்கள் தெட்டத் தெளிவாக அறிந்து விட்டார்கள். இதனை

" "ஓகோ! இவ் யாழ்ப்பாணத்திலுள்ள கிறீஸ்தவசமய குருமார், சைவசமயக் குருமார் என்றும் இருசமய குருமாருடைய கருத்தும் தத்தஞ் சமய பத்தியை வளர்தலினிடத்தன்று தத்தம் வயிறு வளர்த்தலினிடத்தேயாம்" " என்ற வசனம் உய்த்துணர வைக்கின்றது. குருமாருக்குச் சொன்னது ஏனையருக்கும் பொருந்தும். இது 1872ல் வெளியிட்ட யாழ்ப்பாணத்து சமயநிலை என்ற துண்டுப் புத்தகத்தி லுள்ளது.

## உண்மையான சிஷ்யன் சுப்பிரமணியப்பிள்ளை
## பண்டிதமணி கூறுகிறார்

"வடக்கேயிருந்து வியாபாரஞ் செய்யும் பொருட்டு வண்ணார்பண்ணையில் வசித்த சாதாரண குடும்பமொன்றில் உள்ளது ஒரு பிள்ளை அம் பிள்ளைக்குச் சுப்பிரமணியபிள்ளை என்று பெயர். நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் அக்காலம் தொட்டுப் படித்து வந்தது அப்பிள்ளை. பிள்ளையின் ஒழுக்க விசேடம் நாவலர் அவர்களைக் கவர்ந்துவிட்டது. நாவலர் அவர்கள் அப்பிள்ளைமீது தனது மாசற்ற அன்பைச் சொரிந்தார்கள். தம் தருமத்தைத் தலை நிறுத்துவதற்கு ஒரு பிள்ளையைக் கடவுள் தந்திருக்கிறார் என நம்பினார்கள். பிள்ளை நாவலர் காட்டிய வழியில் மயிரிடை தவறாது நடந்து வந்தது. ஆனால் விதி வேறு விதமாயிருந்தது. நாவலர் அவர்கள் கண் காண ச. சுப்பிரமணியப்பிள்ளை சிவபத மெய்தினார். சுற்றத் தொடர்புகளை அறுத்து வேறு வழியில் சென்ற நாவலர் அவர்களை, அவ்வழிக் குறுதுணையென்று நம்பியிருந்த சுப்பிரமணியப் பிள்ளையின் மறைவு மிக மிக வருத்திவிட்டது. நாவலர் அவர்கள் அழுதுவிட்டார்கள். உருகிவிட்டார்கள். நாவலர் அவர்கள் உருகி உகுந்த கண்ணீர் பன்னிரண்டு அத்தியாயங்கள் கொண்ட சுப்பிரமணியப்பிள்ளையின் சரித்திரமாயெழுந்தது. அச் சரித்திரத்தில் தமது நோக்கங்கள் நம்பிக்கைகளை வெட்ட வெளிச்சமாகக் காட்டியிருக்கின்றார்கள். அவ்வளவிலும் அவரது இதய நெகிழ்வு அடங்கியதில்லை. அந்நெகிழ்வு சுப்பிரமணியப்பிள்ளை மீது இருபது பாடல்களாய் உதித்தது. மனிதரைப் பாடாத நாவலர் அவர்கள் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஏழைச் சுப்பிரமணியப்பிள்ளையைப் பாடினார்கள்.

சதாசிவம்பிள்ளை முதலிய இருவகைப் பரம்பரையினரும் நாவலர் சொல் வழி நில்லாது சுப்பிரமணியப்பிள்ளையின் சரித்திரத்தை வெளியிடுவதுபோற் பாசாங்கு செய்து பல வருடம் மறைத்து வைத்திருந்து பின் அதனைச் சாம்பார் செய்துவிட்டார்கள்; பாடல்கள் ஒருவாறு உயிர் பிழைத்து வெளிவந்து விட்டன.

குறிப்பு: வெளிவந்த பாடல்கள் கூட உண்மையானதோ என ஏற்பட்ட ஐயம் இப்போ நிலைத்திருக்கிறது. (முன் பார்க்கவும் பக்கம் — 34)

இந்நூலாசிரியர் குறிப்பு; ஆனல் தப்பிப் பிழைத்த பாடல்களும் உண்மைப் பாடல்களா அல்லது உருக்குலைந்த பாடல்களா என்பது இப்போ ஆராய்ச்சிக்குரிய விடயமாயிருக்கின்றது.

## சுப்பிரமணியப் பிள்ளையின் மறு அவதாரமோ

—... ... ... ... "இது இவ்வாறிருக்கச் சீவரத்தினம் என்ற உபாத்தியாயர் சில வருடங்களுக்கு முன் என்னை அணுகினர். "உண்டிருந்து வாழ்வதற்கே" செயல்களை அர்ப்பணிக்கின்ற உபாத்தியாயர்களை நோக்கிப் பழகிய வகையில் அவரைப் பொருள் செய்யாது நோக்கினேன். அவர் மீண்டுவிட்டார். பின் ஒருமுறை சந்தித்து தாம் நாவலர் வித்தியாசாலையிற் படிதது பின் அங்கேயே படிப்பித்து வருகிருர் என்ருர். நாவலர் வித்தியாசாலை தோன்றியபோதே அங்கேயுள்ள தூண் வரிசைகள் தோன்றி இப்பொழுதும் அப்படியே அசைவின்றி நிற்கின்றனதாமே; அந்த முறையில் திரு. சீவரத்தினமும் அங்கே படித்து அங்கே படிப்பிப்பதில் என்ன விசேஷம் இருக்கப்போகிறது என்று எண்ணினேன். அவர் மௌனியாய் இருந்துவிட்டுப் போய்விட்டார். ஆனல் அவரோ விடாக்கண்டர். மேலும் மேலும் தொடர்ந்தார். மற்ருெருநாள் "நாவலர் சமயப்பணி" என்ற கையெழுத்துப் பிரதியுடன் தோன்றினர். அதனை வாசித்த பிறகு அவரை உற்று நோக்கினேன. மனங்கலந்த உரையாடலும் நடந்தது. நாவலர் அவர்களின் அன்புக்குப் பாத்திரமாயிருந்து மறைந்த சுபபிரமணியபபிள்ளை தானே இப்பொழுது சீவரத்தினம் ஆசிரியராய்ப் பிறந்து வந்திருக்கிருர் போலும் என்ற எண்ணம் என் இதயத்தில் உதித்தது. அவர் எழுதிய புத்தகம் நாவலர் அவர்களின் நோக்கங்கள் நமபிக்கைகளை ஒரு அளவுக்கு எட்டியும் எட்டியும் தொட்டும் பார்ப்பதாக அமைந்திருக்கின்றது;

...—...... நாவலர் அவர்களின் நோக்கம் படர்வதற்கு திரு. சீவரத்தினம் ஒரு தனிப் பற்றுக்கோடு என்பது எனது கருத்து.

திருநெல்வேலி,யாழ்ப்பாணம், 1-11-62. சி. கணபதிப்பிள்ளை,

## பகுதி ஐந்து.

நாவலர் பெருமான் அவர்களின் தருமச் சொத்துக்கள் விபரங்கள் :-

மேற்படி நூலாசிரியர் இவ் இரண்டாம் பதிப்பு எழுதுவதற்கு ஆசிதந்து நல் ஆலோசனைகள் வழங்கிய யாழ்ப்பாணத்து மெய்கண்ட தேவர் ஆதீனகர்ததா 'சித்தாந்த சரபம்' வித்துவான் க. கணபதிப்பிள்ளை அவர்கள், நாவலர் பெருமானின் தர்மச் சொத்துக்கள விபரங்கள் ஒரு நூலலும் இல்லையே என்ற குறையை எடுத்தியம்பி அக் குறையினை இயன்றளவு நிவர்த்தி செய்யும்படி பணித்துள்ளார்கள். கால எல்லைக்குள்ளே புத்தகம் அடித்து முடியும் நிலையில் இருந்தும் உடனே இதன் பின என்ஞல் இயன்றளவு நாவலரின் தருமங்களின் விபரங்களை சேர்த்து சேர்த்து இந் நூலில் ஐந்தாம் பகுதியாக்கி அவற்றைத் தர முன்வருகிறேன — ஆனல் விபரக் குறைவுகள் இருப்பவற்றை திரும்பவும் இந் நூல் பதிப்பிக்கப்படும் என நம்புகிறேன். அடுத்த பதிப்பிலேனும் பூரணமாக்கித் தரப்படும் என எண்ணுகிறேன். இதற்கு எனது வாசகர்களும் இயன்ற விபரம் தந்து உதவ வேண்டுகிறேன். குறித்த நாவலர் பெருமானின் தருமச் சொத்துக்கள் விபரங்கள் இப்போ தரக்கூடியவை பின் வருமாறு;-

10

## நாவலர் பெருமானின் தர்மச் சொத்துக்கள்

'இந்துசாதனம்' 13-11-1992 (சைவபரிபாலன சபையின் ஆரம்ப பரீட்சை செயலாளருமாய் இருந்து, பண்டிதமணியவர்களால் 'சுப்பிரமணியப்பிள்ளையின் மறு அவதாரமோ என குறிப்பிடப்பட்ட) ஆசிரியர், சி. சிவரத்தினம் அவர்கள் எழுதிய கட்டுரை பார்க்கவும் புத்தகம் 104. இதழ் 13.

1919ம் ஆண்டு பங்குனி மாதம் 27ம் திகதி 10261 ஆம் இலக்கச் சாதனம் நொத்தாரிசு க. சு. வீரவாகு முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இதில் 14 விதானங்கள் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1963ம் ஆண்டு ஆரம்பித்த நாவலர் தரும பாதுகாப்புச் சபையின் அமைப்பாளர்களுள் முன்னணியில் இயங்கும் ஸ்ரீ வே. மே. ந. சபாரத்தினம்பிள்ளை அவர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தில் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது:-

நல்லூர்க் கந்தசுவாமி கோயில், தெற்கு வீதி மடாலயத்தைப்பற்றி சைவ அபிமானிகள் வேண்டுகோளுக்கிணங்கி, பின்வரும் விபரங்களை யாழ்ப்பாணத்திலுள்ள சைவசமயிகள் யாவரும் அறிவது அவசியமாகையால் அவற்றைக் குறிப்பிடுகின்றோம்.

1) 1874ம் ஆண்டு ஆனி மாதம் 6ந் திகதி நா. சுப்பிரமணியர் கந்தப்பசேகரர் என்ற நொத்தாரிசுவினால் எழுதப்பட்ட அறுதி உறுதி இல. 67ன் விபரம்.

1874ம் ஆண்டு 6ந் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்கு நல்லூர் குடி சுப்பையர் கார்த்திகேய ஐயராகிய நானும் ஜானகி அம்மாவும் காணி அறுதி உறுதி முடித்துக் கொடுத்ததாவது நல்லூரிலிருக்கும் கார்த்திகேய ஐயர் ஜானகி அம்மா பேரிற் தோம்பு அம்மையனூன் வளவிலும் மறு பிரிவிலும் (நு. ப. 5 குளி 14) கொட்டிலும் தலைவாசலும் பனை செய் பயிர் வகைப் பயிர்களும் கிழக்கு காசியப்பமா ஆதனம். வடக்கு, ஒழுங்கை, மேற்கு தெற்கு கந்தசாமியார் கோயில் ஆதனம். இந்தக் காணி அடங்கலும், மேற்குறித்த நாவலர் அவர்களாலும் அவர்களுக்குப் பின் ......
... — ........... அவர்களுடைய சிஷ்ய பரம்பரையிலே அவருடைய விதானப் பிரகாரம் அதிபதிகளாய் வருபவர்களாலும் நடத்தப்படும் வேதாகம பாடசாலை, சிவபூசை, குருபூசை, மாகேசுரபூசை, சிவசாத்திரம், சிவபுராண படனம் முதலிய சிவ தருமங்களுக்கு ஆதாரமாகிய சைவப்பிரகாச மடாலய ஸ்தாபனத்தின் பொருட்டு நாவலரவர்களுக்கு அறுதியாக விற்று விலை; ரூபா 750/-.

2) ஆறுமுகநாவலர் அவர்களின் மாணவனாகிய வே. கனகரத்தின உபாத்தியாயர் எழுதிய ஆறுமுகநாவலர் சரித்திரம் என்ற நூலில் இருந்து பெறப்படும் பின்வரும் தகவல்கள்.

பக்கம்; 109, 110, 111 வண்ணார்பண்ணையிலுள்ள த. இராகவப்பிள்ளை கு. செல்வநாயகம்பிள்ளை என்னும் இருவராலே கட்டுவிக்கப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் தெற்கு வீதி மடத்திலே, பவ வருஷம் வைகாசி மாதம் 20ந் திகதி திங்கட்கிழமை மூல நட்சத்திரத்திலே திருஞானசம்பந்த நாயனார் குருபூசையும், நல்லூர் கோயில் வசந்த மண்டபத்திலே பிரசங்கமும் செய்யப்பட்டன. "தோடுடைய செவியன் ........... ' என்னும் திருவிருத்தத்தை எடுத்து, ................ அத் திருப்பாட்டினுள்ளே ...... மறைந்து கிடந்த வேதப் பொருளையும் இனிது காட்டிப் பிரசங்கித்தார்.

கந்தசுவாமி கோயிற் திருவிழா சமீபித்தபடியால் ........ திருவிழாக் காலத்திலே .......... தெற்குவீதி மடத்திலே புண்ணியவான்கள் சிலரைக் கொண்டு மாகேசுர பூசை செய்வித்து சுவாமி வீதியிலே உற்சவங்கொண்டருளும்பொழுது சுவாமிக்குப் பின்னாக திருவாவடுதுறை ஆதீன ஓதுவார்களைக் கொண்டு தேவாரம் ஓதுவித்துக் கொண்டு வந்தார்.

பொதுவாக நாவலர் தருமச் சொத்துக்களை பின்வருமாறு வகுக்கலாம்.

1. நாவலர் வித்தியாசாலை, வண்ணார்பண்ணை (முன்பு, சைவப்பிரகாச வித்தியாசாலை)

குறிப்பு; நாவலர் பெருமானால் முல்லைத்தீவிலும் கோப்பாயிலும் கோண்டாவிலிலும் ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரிகள் உண்டு. இதைவிட இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையும் நாவலரின் தூண்டுதலின் பெயரிலேயே ஸ்தாபிக்கப்பட்டது. நாவலர் வேண்டுகோளுக்கு இணங்கி சில அந்தணர் அன்பர்கள கீரிமலையில் காணி நன்கொடை தந்து அவ்வாதனத்தில் சமஸ்கிருத முதலிய வகுப்புக்கள் நடத்தப்பட்டதும் நோக்கத்தக்கது.

2. சிதம்பரம் நாவலர் வித்தியாசாலை, சிதம்பரத்தில் 5 கல்லூரிகள் சிவபுரியிலுள்ள புகையிலைத் தோட்டங்களும் உட்பட (அதற்குரிய சொத்துக்கள்) மதருஸ் தங்கசாலை வீதி நாவலர் அச்சகம், புத்தகசாலை இவைகளுக்கான வயல் நிலங்கள் முதலியன.

3. போர்த்துக்கேய அழிப்பின் பின் நாவலர் முதல் ஸ்தாபித்து குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வரும் கைலாச பிள்ளையார் கோயில, அதன் ஆதனவகைகள் மேல நீதிமன்றம சென்ற Tr 45 வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றம் பதிவேட்டில் காணி விபரங்களும தரப்பட்டுள்ளது உறுதிவிபரமும் உள்ளது.

4. நாவலர்பெருமானது இல்ல நல்லூர் கந்தசாமி கோவில் தெற்குத் திருவீதியிற் பிரதிஷ்டை செய்யப்பெற்று வழிபடப்பெற்று வந்து பின் திருவுருவச்சில அகற்றப்பட்ட துண்டுக் காணியும அருகில் உள்ள நல்லூர் கோயில வீதியில் விழுந்த ஆகாயக்குண்டு வீச்சிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பிய நாவலர் மண்டபமும்

5. கலாச்சார அமைச்சால் நாவலர் குடும்பத்தினரிடம் இருந்து சுவீகாரம செய்யப்பட்டு நாவலர் பிறந்த பரம்பரைக் காணியின ஒரு பகுதியில அமைக்கப்பெற்று இருக்கும் நாவலர் கலாசார மண்டபம் தறபோது ஒரு பகுதி சைவ நூல நிலையமாகவும மறு பகுதி சனசமூக நிலையங்களின சமாச காரியாலயமாகவும், கீழே இருக்கும் மண்டபம யாழ். மாநாநகரசபை ஆணையாளர் பொறுப்பில் உள்ள கலாசார மண்டபமாயும அடிவளவு யாழ் நூதனசாலை இருப்பிடமாகவும் திகழ்கின்றது.

6. யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் நாவலர் வித்தியாசாலை உட்பட பல ஆதனங்களுக்கும் தர்மங்களுக்கும பொறுப்புடமை நிர்ணயிக்க அரசாங்கம ஒரு புறமாகவும நாவலர் குடும்ப அங்கத்தவர் ஒரு புறமாகவும நாவலர் பாதுகாப்புச் சபை போன்ற பொதுமக்கள் பிரதிநிதிகள் ஒரு புறமாகவும இல Tr 22 வழக்கில் ஈடுபட்டுள்ளனர். இது முடிவுறவில்லை. பதிவேட்டில் சொத்து விபரம் உண்டு.

7. நூற்றுக் கணக்கான நாவலர் தர்மச் சொத்து கிட்டங்கிகள் காணிகள் நல்லூர் நாயன்மார்கட்டு செம்மணி பெரியகடை யாழ்ப்பாணம் வெளிமாகாணங்கள் — இந்தியாவிலுள்ள ஆதனங்கள்.

8. யாழ். சைவபரிபாலன சபையும், யாழ். இந்துக்கல்லூரி, இந்து போர்ட்டும் முதலான பழம்பெரும் தாபனங்கள், நாவலர் வழிவந்த சிஷ்ய பரம்பரையினரும் நாவலர் அன்பர்களாலும் ஆரம்பித்தும் நிர்வகிக்கப்பெற்றும் வந்தன

இறுதியாக நாவலரின் பெரிய தருமச் சொத்து அவரின் வழி ஒழுகிய அவரது சீட பரம்பரையும் அவரின் அன்புத் தொண்டர்களுமேயாகும். இந்தச் சொத்துகள் அனைத்தும் நாவலர் பெருமானது மூலநோக்கங்களுக்கமைவாக பரிபாலிக்கப் பெறல் வேண்டும் என விரும்பும் பல அடியவர்களுள் தற்போது இந் நூலாசிரியர் பொறுப்பாளராயிருக்கும் சைவப்பிரகாச அச்சகத்திலும் நீண்டகாலம் ஊழியராயிருந்து இந்நூலை வெளியிட ஊக்கமும் அறிவுரைகளும் தந்த "நாயன்மார் – நாதன்" எனும் கா. இரகுநாதனும், அவருக்குப் பேருதவியாக இருந்த பழம் ஊழியர் சி. குணசிலனும் ஸ்தாபனத்தில் நாவலரின் வீறுடனே இயங்கிவரும் புதியஊழியர்களான - செல்வராசா டயஸ், தமிழ்ச்செல்வன் கோபாலகிருஷ்ணசாமி - (புதுக்கவிஞர்) தயாகரன், நவரதினம் குகதாஸ்(குகா) ஆகியோரும் இத்துறையில் அயராது உழைத்துள்ளதைக் குறித்து அவர்களும், எமது பாராட்டுக்குரிய நாவலரின் தர்மச் சொத்துக்களே எனக் குறிப்பிட விரும்புகிறேன்.

## 4. முடிவுரை:

இலங்கையிலும் இந்தியாவிலும் சிவதொண்டு செய்து அக்காலப் பாதிரிமார்களுடன் எதிர்வாதம் புரிந்து. குறிப்பாக ஒரு மதத்தினரை இன்னொருமதத்தினர் வலிந்து மத மாற்றம் செய்ய முயல்வது ஏற்றுக் கொள்ள முடியாதது என்ற கொள்கையையும் நிலைநாட்டி சைவ வீறுடன் வாழ்ந்த அருட்செலவர் சைவ சமூகத்தில் உணர்ச்சியற்றோராய இருந்தோரைப் பார்த்து அவர்கள் மீது இரங்கி ஒரு அறைகூவலையும் விடுத்திருதார்.

*"நான் எனது வாழ்நள் முழுவதையும் எனது இரு கண்களாகக் கருதும் சைவசமயத்துக்கும, தமிழ் மொழிக்கும் அர்ப்பணித்து அதற்காகத்தான் எனது இலல்ற வாழ்க்கையையே முற்ருகத் துறந்து அதனுல் வரக்கூடிய பொருள பண்டம் மற்றும் சுகபோகங்கள் அனைத்தையும் உதறித் தள்ளியுள்ளேன்".*

எனத் தானே கூறியுள்ளபடி அதி உன்னத தியாக வாழ்வை மேற்கொண்ட ஆறுமுக நாவலர் அவர்கள் முதலிற் சைவத்தை வளர்த்தார் தமிழைக் காத்தார், எழுத்தாளராயும், பேசசாளராயும், புலவராயும புரவலராயும் மிளிர்ந்தார். சமூகத்தைச் சீர்திருத்தி அருநதொண்டாற்றினர். பிரசாரமும் செய்தார். மேலும் வறுமையை எதிர்த்தும், சாதிப் பாகுபாட்டையும சமூக ஏற்றத் தாழ்வுகளையும் சாடிய தோடு சமதர்ம சமுதாயத்திற்காகவும் தலை நிமிர்ந்து பேசராடினர். இங்ஙனம் சைவ வீறுடன் தெய்வீக சிவநெறிச் சூழலில் ஒழுக்கத்தை வளர்த்தும் அநீதிகளை எதிர்த்தும் அஞ்சா நெஞ்சராய் நீதியை எங்கும் நிலைநாட்ட உழைத்து வந்தமையை எவரும் மறுக்கவோ மறக்கவோ முடியாதெனலாம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் மட்டுமன்றி உலக அரங்கிலுங்கூட சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய பெருமை தேடித்தந்து இறைபதம் எய்திய எமது இலட்சிய ஜோதியாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் இந்த யுகத்தில் எமக்கென அவதரித்த தெய்வீக வழிகாட்டியாவர்.

வாழ்க நல்லை நகர் தந்த நாவலர் நாமம்! வாழ்க அவர் விரும்பிய நல்லறங்கள் வளர்க அன்னரின் தொண்டுகள செய்யும் திருக்கூட்டம்.

சுபம்.

இந்து இறணய்வுக்கழக பிரசாரப்பகுதி வெளியீடு — இரண்டாம் பதிப்பு. 01-06-93.

## பகுதி 7 நாவலர் விக்ஞாபனம்

"யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்புகிறவன், அந்தச் சமயத்தின்வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது, பயன் பெறான். அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங்களும், அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும் விலக்குப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணிய பாவங்களின் பலன்களாகிய சுக துக்கங்களும், அவரை வழிபடும் முறைமையும், அந்த வழிபாட்டினாலே பெறப்படும் பிரயோசனமும், ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாதபொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற்குரு முகமாக விதிப்படி பெறப்படுஞ் சமயநூற் கல்வி கேள்விகள் இல்லாதபொழுது, அந்த அறிவு உதியாது. ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு..........."

"... ... ... ... ... ... நான் ஜயவருடம் (1834) முதலாகப் பீற்றர் பார்சிவல் துரையுடைய இங்கிலீஷ் வித்தியாசாலையிலே இங்கிலீஷ் கற்றேன். பிலவ வருடம் (1841) பார்சிவல் துரைக்குத் தமிழ்ப் பண்டிதனாயினேன். பிதிரார்ச்சிதம் நான் பெறவில்லை; என்னுடைய தமையன்மார்கள் நால்வரும் இயன்றமட்டும் பொருளும் உத்தியோகமும உடையவர்களாயிருப்பவும், அவர்கள் பொருளுதவியும் நான் பெறவில்லை. இங்ஙனமாகவும், மேற்கூறப்பட்ட விருத்தியை நான் கீலக வருடம புரட்டாதி மாசம் (1848) பரித்தியாகஞ் செய்தேன். பார்சிவல் துரை "நான் தங்களுக்கு உயர்வாகிய வேதனம் தருவேன்; தாங்கள் என்னை விடலாகாது" என்று பலதரம் வற்புறுத்திச் சொல்லிய வழியும், நான் அவ் விருத்தியில் விருப்பம் வைக்கவில்லை. நான் இங்கிலீசிலே அற்ப விற்பத்தியாயினும் பெற்றிருந்தும், என்னோடு இங்கிலீஷ் கற்றவர்களுள்ளும் எனக்குப் பின் இங்கிலிஷ் கற்றவர்களுள்ளும் அநேகர் தங்கள் தங்கள் சக்திக்கேற்ற உத்தியோகம்பெற்று வாழ்ந்திருக்கக் கண்டும், நானும் என் சக்திக்கேற்ற உத்தியோகத்தின் பொருட்டு முயற்சி செய்யின் அது தப்பாது சித்திக்கும் என்றறிந்தும், அஃதில்லாமையால் விளையும் அவமதிப்பைப் பார்த்தும் உத்தியோகத்தை விரும்பவில்லை. தமிழ்க் கல்வித் துணை மாத்திரங் கொண்டு செய்யப்படும் உத்தியோகம் வலிய வாய்த்தபொழுதும்,

அதையும் நான் விரும்பவில்லை. கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளை நிலம், தோட்டம் ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமேயுடையது என் சென்ம தேசமாகவும் நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்.

இப்பேராசையினலே இருபது வருஷ காலம் நான் செய்த முயற்சிகள் பல; அவைகளுள்ளே சித்திபெற்றவை மிகச்சில சைவ சமயிகள் யாவரும் சைவ சமயத்திலே சிரத்தை யுடையவர்களாகித் தங்கள் தங்களால் இயன்ற உதவி செய்தார்களாயின், நான் எடுத்த முயற்சிகளெல்லாம் இதற்கு முன்னரே நிறைவேறிவிடும்; நிறைவேறின், என்னைப்போலவே பிறரும் அங்கங்கே நன் முயற்சிகளைச் செய்வார்கள்; செய்யிற் கல்வியும் சமயமும் தழைத்தோங்கும்

தன்னிம்மைப் பயன்களெல்லாம் இழந்தும் கைம்மாறு வேண்டாதும் இருபது வருஷ காலம் சுவசமய விருத்தியின்பொருட்டு முயற்சி செய்பவன் ஒருவன் மற்றைச் சமயத்தார்களுள் இருப்பானயின், அவன் எடுத்த முயற்சிகளுள் யாதுசித்திபெறாது! நம்முடைய சைவ சமயிகள் தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும்பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரையின் அமையாது, பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள். இதனல் எனக்கு யாதாயினும் ஓர் குறைவு உண்டு என்னுங் கவலை எனக்குச் சிறிதும் இல்லை. எனக்குச் செய்யப்படுவனவற்றைக் காணுந்தோறும் கேட்குந் தோறும், பிறருக்குத் தமிழ் கற்றலின் கண்ணும் தமிழ்க் கல்வியையும் சைவசமயத்தையும் வளர்த்தலின் கண்ணும் ஊக்கங் கிளராவண்ணம் தடைவிளைகின்றதே என்னுங் கவலை எனக்குப் பெரிதுமுண்டு. பூர்வ காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயன்ற பெரியோர்களுக்குச் சுவசமயிகளாலே நன்கு மதிப்பும் பரசமயிகளாலே இடையூறும் செய்யப்பட்டன. தற்காலத்திலே சைவசமய விருத்திப்பொருட்டு முயலும் சிறியேனுக்குச் சுவசமயிகளாலேயே அவமதிப்பும் இடையூறும் செய்யப்படுகின்றன. பரசமயிகளோ எனக்கு இடையூறு செய்யவுமில்லை. என்னை அவமதிக்கவுமில்லை இஃதென்னையாச்சரியம்!!! சைவ சமய விருத்திப் பொருட்டு முயலும் எனக்கு நம்மவர்களாலே அவமதிப்பும் இடையூறும் செய்யப்பட்டபோது, நான் தமிழ்க் கல்வியிலும் தமிழ்க் கல்

வினையயும் சைவ சமயத்தையும் வளர்த்தற்கு வேண்டும் முயற்சிகளி லும் போக்குங் காலத்தை முன் பயின்ற இங்கிலீஷிலேயே போக்கி உத்தியோகமும் செல்வமும் பெற்று நம்மவர்களாலே நன்கு மதிக்கப் படல் வேண்டும் என்று விரும்பாவண்ணம் திருவருள் சுரந்த சிவ பெருமானது பெருங்கருணைத் திறத்தை மறவாதிருத்தலே எனக்கு வாய்ப்புடைத்தாயதோர் பெருஞ்செல்வம். இஃதிங்ஙனமாக நிலையில் லாத என் சரீரம் உள்ளபொழுதே என் கருத்து நிறைவேறுமோ நிறைவேருதோ என்னுங் கவலை என்னை இரவும் பகலும் வருத்துகின் றது. அக் கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபி விருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலந்தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்றுவல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிர சாரகர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே, நல்லொழுக்கமும் விவேகமும் கல்வியில் விருப்பமும் இடையரு முயற்சியும் ஆரோக் கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து, அன்னம். வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண விலக்கியங்களையும் சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தி யாயர்களாகவும் சைவப் பிரசாரகர்களாகவும் நியோகிக்கலாம்,

சைவ சாஸ்திரங்களைக் கற்போரும், கற்பிப்போரும், அவர்களுக்கு அன்ன வஸ்திர முதலியவை கொடுப்போரும், சைவாகம வுணர்ச்சி நிலைபெறும் பொருட்டுத் தனராசிகளையும் பூமிகளையுங் கொடுப்போ ரும் பெறும் பயன், சுப்பிரமணியக் கடவுள் அகத்தியமாமுனிவருக்கு உபதேசித்தருளிய சிவதருமோத்தரம் என்னும் உபாகமத்திலே சொல் லப்பட்டிருக்கின்றது.

இதுவே எல்லாத் தருமங்களுக்கும் மூலமாகிய உத்தமோத்தம தருமம் என்பது, சாத்திரம் யுத்தி அனுபவம் என்னும் மூன்றுக்கும் ஒத்து துணிவு. இது ஒருவராலும் மறுக்கப்படமாட்டாது. இது சத் தியமே எனக் கொள்ளினும் இத் தருமத்தை நடாத்துதற்கு நான் யோக்கியனல்லேன் என்னுங் கருத்து அநேகருக்கு உண்டு, அக்கருத் துடையவர்கள் தாங்களே நடத்தக் கடவர்கள். அது கூடாத வழி யோக்கியராகிய பிறரைக் கொண்டாயினும் நடத்துவிக்கக் கடவர்கள். இத் தருமத்தை நானே நடத்தல் வேண்டும் என்னுங் கருத்து எனக்கு இல்லை, "யாவர் குத்தினும் அரிசியானுற் போதும்" என்றபடி யாவர் நடத்தினும் இத்தருமம் நிறைவேறினுற்போதும் என்பதே என்கருத்து,

## பகுதி 8 யாழ்ப்பாணச் சமய நிலை

சைவ சமயிகளே! பாதிரிமார்களும் அவர்களைச் சார்ந்த கிறிஸ்தவர்களுஞ் செய்யுஞ் சிவதூஷணங்களைக் கேளாதொழியுங்கள். உங்கள் பிள்ளைகளை அவர்களுடைய பள்ளிக்கூடங்களிலே விபூதியழித்துவிட்டுப் போய்ச் சிவதூஷண புத்தகங்கள் படித்தற்கு அனுப்பாதொழியுங்கள். ஊர்தோறும் பள்ளிக்கூடங்கள் தாபித்து, உங்களுள்ளே கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த மேலோர்களைக் கொண்டு அவைகளை நடத்துவியுங்கள். உங்கள் பிள்ளைகளை அப் பள்ளிக்கூடங்களிலேயே அனுப்பி லௌகிக நூல்களையும் நீதி நூல்களையும் சைவசமய நூல்களையும் படிப்பியுங்கள். சாதாரணக்கல்வி விசாரணைத் தலைமைத்துறைக்கு விணணப்பமெழுதிக் கவர்ன்மெண்டாரிடத்திலே பொருளுதவி பெற்று, லௌகிக நூற்கல்வியை விருத்தி செய்யுங்கள். அதற்கு எவராவது இடையூறு செய்யின், நீங்களெல்லாந் திரண்டு கொழும்புக் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள். அவர்கள் பாராமுகமாயிருப்பின், இங்கிலாந்துக் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பமெழுதிக் கொள்ளுங்கள்.

## பகுதி 9 நாவலரின் கடைசிப் பிரசங்கம்

யாழ்ப்பாணச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் பிரமாதி வருடம் ஆடி மாசத்திற் (1879) சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினமாகிய சுவாதி நட்சத்திரத்திலன்றேயாம். பிரசங்கம் தொடங்கினதும் முடிந்ததும் சுவாதி நட்சத்திரங்களிலேயாம். அன்று எடுத்துக் கொள்ளப்பட்ட பீடிகை "பொன்னு மெய்ப்பொருளுந் தருவானை" என்னுஞ் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரமாம். பிரசங்க முடிவிலே சனங்களை விளித்து, நான் உங்களிடத்துக் கைம்மாறு பெறுதலைச் சிறிதும் எண்ணாது முப்பத்திரண்டு வருட காலம் உங்களுக்குச் சைவசமயத் துண்மைகளைப் போதித்து வந்தேன். எனக்குப்பின் சைவசமயங் குன்றிப் போமென்று பாதிரிமார்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நான் உயிரோடிருக்கும்போதே உங்களுக்காக ஒரு சைவவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள். இன்னும் என்னைப்போலப் படித்தவர்களும் சன்மார்க்கர்களுமாய அநேகர் வருவார்கள். ஆனால் உங்களுடைய வைவுகளைக் கேட்டுக் கேட்டுக் கைம்மாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப்போல ஒருவரும் வரார். இதுவே என்னுடைய கடைசிப் பிரசங்கம். இனிமேல் நான் உங்களுக்குப் பிரசங்கம் பண்ணமாட்டேன் என்னுங் கருத்துப் புலப்பட விரித்துக் கூறினார். அன்றைப் பிரசங்கத்தைக் கேட்டுக் கண்ணீர்விட்டழாதவர் அங்கே ஒருவருமில்லை. வித்தியாசாலையிலுள்ள தூண்கள் மரங்கள் தாமும் உருகின. இதுவே இவருடைய கடைசிப் பிரசங்கம்.

மற்றைநாள் "சென்ற இரவு ஏன் இந்தப் பிரகாரம் பிரசங்கஞ் செய்தீர்கள்" என்று அன்பரொருவர் கேட்ட போது, தமக்கு அந்த நேரம் ஒன்றுந் தெரியவில்லை என்றார்.

(த. கைலாசபிள்ளை எழுதிய நாவலர் சரித்திரம்)

---

இவ்விரண்டாம் பதிப்பு இலங்கையில் வெளியிடும்தினம்
நாவலர் அவதரித்த 171-வது ஆண்டு பூர்த்தி நாள் 18 — 12 — 1993
"சர்வாலயம்" — 5, செட்டித்தெரு நல்லூர், யாழ்ப்பாணம் இலங்காபுரி.

உ

சிவமயம்

## அர்ப்பணம்

சிறுவயதில் எம்மைப் பெற்றுவளர்த்து அறிவூட்டி ஆசீர்வதித்த அருமை குரவர்கள் எனது தந்தையாகிய நியாயவாதி மூதறிஞர் ஸ்ரீ சரவணமுத்து தங்கராஜா அவர்களுக்கும், எனது தாயாராகிய திருமதி [illegible] தங்கராஜா அம்மையாருக்கும் அர்ப்பணிக்கிறேன்.

## சமர்ப்பணம்

இறைவன் திருவருளால் யாழ் சைவபரிபாலன சபையாரால் நடாத்தப்படும் சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையில் சிறப்பாக அச்சிட்டுத் தந்தமைக்கும் பரந்த இறை விழிப்புக்கழகத்தின் பிரச்சாரம் கருதியாக அன்னார் வெளியிட்டமையிட்டு உள்ள இச்சிறு நூலில் உள்ள குறைகளை மன்னித்து நிறைவான கருத்துக்களை ஏற்று யாவரும் பயன் பெறுவார்களாக. இந் நூல் சிறப்பாக வெளிவர உதவி செய்தவர்களுக்கு எனது நன்றி கலந்தாருக்கு எனது முன்னைய பதிப்பு புத்தகங்கள் வாங்கி ஆதரித்த வாசகர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அன்னவருக்கும் இறைவன் அருள் புரிவானாக.

மதிப்புமிகை ஆக்கியோனுக்கே

இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா

---

இந்து இறைவிழிப்புக்கழக பிரச்சார நூல் வெளியீடு. 1
விரிவுரையாக்கப்பட்ட இரண்டாவது பதிப்பு

முதலாம் பதிப்பு 1991 - 1992 இரண்டாம் பதிப்பு 1993

'சர்வாலயம்'
6, செட்டித்தெரு, நல்லூர்

## இந்நூலாசிரியரின் சில வெளியீடுகள்

1) ஆறுமுகநாவலர்
2) யோகசுவாமிகள்
3) விபுலானந்த அடிகள்
4) சுவாமி விவேகானந்தர்
5) சுப்பிரமணிய பாரதியார்
6) சேர். பொன்னம்பலம் இராமநாதன்
7) சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமி

---

அச்சுப் பதிவு: யாழ் சைவபரிபாலன சபையின்
சைவப்பிரகாச அச்சகம், 450 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.